# ஆண்டு அறிக்கை

2014

# இலங்கை போக்குவரத்துச் சபை

# உள்ளடக்கம்


01. தொலைநோக்கு, பணி, இலக்குகளும் குறிக்கோள்களும்

02. அறிமுகம்

03. தலைவரின் செய்தி

04. செயற்திறன்

05. இறுதிக் கணக்குகள்

06. கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

**தொலை நோக்கு**

பிராந்தியத்தின் அதி சிறந்த பயணிப் போக்குவரத்தாளர்

**பணி**

பொது மக்களுக்கு பாதுகாப்பான நம்பத்தகுந்த வசதியுள்ள வீதிப் பயணிப் போக்குவரத்துச் சேவையை நியாயமான கட்டண முறையின் கீழ் சேவை அர்ப்பணிப்புடன் செயலாற்றும் உற்பத்தி வளமிக்க பணியாளரின் மூலம் சகல வளங்களையும் உச்ச நிலையில் பயன்படுத்தி பெற்றுக் கொடுத்து பொருளாதார ரீதியில் சமநிலையை பேணும் நிறுவனமாக இயங்கல்.

**இலக்குகளும் குறிக்கோள்களும்**

1. 12 பிராந்திய அலுவலகங்கள் மூலம் சிறந்த தரமுடைய பயனுடைய பஸ் சேவைகளை ஊக்குவித்து அவற்றை கண்காணித்து இணைத்து ஆலோசனை வழங்குதல்.

2. பாடசாலை செல்லும் சிறார்களுக்கு திருப்திகரமான பஸ் சேவைகளை அளித்தல்.

3. பண நோக்கங்களுக்காக தனியார் துறையினரால் செயலாற்றப்படாமல் அசட்டை செய்யப்பட்டுள்ள வருவாய் அற்ற பாதைகளில் பஸ் சேவைகளை அளித்தல்.

4. புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்தில் இருந்து தூர இடங்களுக்கு பஸ் சேவைகளை அளித்தல்.

5. பொது தனியார் துறை போக்குவரத்து முகவர் நிலையங்களை இணைத்தல்.

6. விழாக்கள், விசேட வைபவங்கள், பாராளுமன்ற, மாகாண சபைத் தேர்தல்கள், முதலிய தேவைகளுக்கு பஸ் சேவைகள இணைத்தல்.

7. தபால்களையும் பத்திரிகைகளையும் பஸ்களில் ஏற்றிச் செல்லல்

8. பஸ் செயலாற்றலுக்காக பொது திறைசேரி, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, மாகாண சபைகள், உரிய அமைச்சுகள் அத்துடன் இதர தொடர்புடைய முகவர் நிலையங்கள் ஆகியவற்றுக்கும் பிராந்திய அலுவலகங்களுக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்தல்

9. இ.போ.ச சாரதிப் பயிற்சி பாடசாலைகளில் இருந்து நன்கு பயிற்றப்பட்ட ஒழுக்காற்றுடைய சாரதிகளை அளித்தல்.

10. சாரதிகளுக்கும் நடாத்துநர்களுக்கும் பொறிவலர்களுக்கும் மேற்பார்வை பணியாளர்களுக்கும் கருத்தரங்குகள், தொழிற் பாசறைகள் ஆகியவற்றை நடாத்துதல்.

11. பிராந்திய வேலைக்களங்களால் உற்பத்தி செய்யப்படும் அலகுகள் துணை அலகுகள் ஆகியவற்றை சாலைகளுக்கு அளித்தல்.

12. வயது வந்தோர்க்கும் பாடசாலை மாணவர்களுக்கும் கவர்ச்சிகரமான கழிவு விகிதங்களில் பருவகால சீட்டுக்களை அளித்தல்.

13. முக்கியமான மாற்று உறுப்புக்களை மாகாண வேலைக்களங்களுக்கு விநியோகிப்பதற்காக நாரேஹேன்பிட்டியில் உள்ள இ.போ.ச தலைமையகத்தில இடப்பெயர்ச்சி களஞ்சியம் ஒன்றை பேணல்.

14. சாலைகளில் பாதுகாப்பு புலனாய்வுகளையும் திடீர் பரிசோதனைக் குழு செவ்வை பார்த்தல் முதலியவற்றையும் நடாத்துதல்.

## அறிமுகம்

நாட்டின் பொருளாதார வளரச்சிக்கு போக்குவரத்தின் எல்லா அம்சங்களும் அவசியமானது என்பதில் ஐயத்திற்கு இடமில்லை. இக்கூற்று வீதிப் பயணப் போக்குவரத்துக்கும் விதிவிலக்கல்ல. இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் ஒரு நாட்டில் கிராமங்களையும் நகரங்களையும் அதன் மூலம் முழு நாட்டையுமே இணைக்கும் முக்கிய பாத்திரத்தை பஸ் வண்டி வகிக்கிறது.

1957.10.31 ஆம் திகதி 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து அதிகார சட்டத்தின் பிரகாரம் நாடு முழுவதும் 80 பஸ் செயலாற்றுனர்களால் மொத்தமாக 1200 பாதைகளில் செயலாற்றப்பட்ட 3532 பதிவு செய்த பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டன. இதன் விளைவாக 1958.01.01 முதல் இலங்கை போக்குவரத்து சபை உருவாகியது.

அன்று முதல் 1977 ஆம் ஆண்டு வரை இ.போ.ச வீதிப் பயணப் போக்குவரத்தில் ஏக போக உரிமையை கொண்டிருந்தது. 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க போக்குவரத்து சட்டத்தின் மூலம் இ.போ.சபையுடன் இணைக்கப்பட்ட 10 பிராந்திய போக்குவரத்துச் சபைகள் 1978 ஆம் ஆண்டு இ.போ.ச வை பன்முகப்படுத்தியன் மூலம் உருவானது. சிறிய அளவிலான அலகுகள் உள்ளூர் பிராந்திய தேவைகளுக்கும் உள்ளூர் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கும் விரைவான தீர்வு கண்டு பயணம் செய்யும் பொது மக்களுக்கு வினைத்திறனுடைய பயனுள்ள விளைவுகளை இ.போ.ச பன்முகப்படுத்துவதன் மூலம் அடையலாம் என அரசு கருதியது.

ஆயினும் இ.போ.ச தொடர்ந்து பெருவாரியான நட்டத்தில் இயங்கியமையினாலும் பொருளாதாரம் சுதந்திரமயமாக்கப்படல் வேண்டும் என்ற நவீன எண்ணக்கருவினால் உருவாகிய பயணத் தேவையை பூர்த்தி செய்ய முடியாமையாலும் வீதிப் பயணிப் போக்குவரத்துக்கு தனியார் துறையை அனுமதிப்பது என முடிவு செய்யப்பட்டது.

பொதுத் துறையை மீள அமைக்கும் பணியில் ஒரு பகுதியாக இ.போ.ச மக்கள் மயமாக்கப்படுவதற்கென அடையாளம் காணப்பட்டது. அரசு தனியார்மயப்படுத்தலில் உறுதியான நம்பிக்கை வைத்திருந்தமையினால் இம்மாற்றம் அரச கூட்டுத்தாபனங்களை அதாவது அரச உடைமையாக்கப்பட்ட

வியாபார முயற்சிகளை பொது கம்பனிகளாக மாற்றும் 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க அதிகார சட்டத்தின் கீழ் இடம் பெற்றது.

மக்கள் மயப்படுத்தலின் போது இயங்கிய 93 போக்குவரத்து சாலைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறான வரையறுக்கப்பட்ட கம்பனிகளாயின. ஊழியர் மத்தியில் கம்பனியின் மொத்தப் பங்குத் தொகையின் அரைவாசி விநியோகிக்கப்பட்டு மீதிப் பகுதியை பொதுத் திறைசேரி வைத்திருந்தது. பெரும்பாலும் ஊழியர் மத்தியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் சபை இக்கம்பனிகளின் நிருவாகத்தை நடாத்தியது. மக்கள் மயமாக்கல் ஏனோ தானோ என்ற முறையில் செயற்படுத்தப் பட்டமையினால் விரும்பிய விளைவுகளை அடைய முடியவில்லை.

எனவே 1977 ஆம் ஆண்டு 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தின் திருத்தம் மூலம் பஸ்கம்பனிகள் 11 கொத்தணி பஸ் கம்பனிகளாக மாற்றப்பட்டன. கொத்தணி பஸ்கம்பனிகளாலும் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை. அதிக பணியாளர், ஒழுக்காற்றில் பெருவீழ்ச்சி, நியாயமற்ற போட்டி, சமூகக் கடப்பாடுகள், தொழில் முறைமையின்மை, வினைத்திறன் இன்மை, செயலாற்று செலவுகளில் உயர்ச்சி, அரசியல் தொழிற்சங்க முறையற்ற தலையீடு, கட்டுமீறிய ஊழல் ஆகியன கொத்தணி பஸ்கம்பனிகளில் நிலவிய சில பிரச்சினைகள் ஆகும்.

மேற்குறித்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு 2005 ஆம் ஆண்டு 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் 2005.10.19 ஆம் திகதி முதல் இலங்கை போக்குவரத்து சபை தாபிக்கப்பட்டது.

## இலங்கைப் போக்குவரத்துச் சபை தலைவரின் செய்தி

2014.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டின் நட்டம் 1,861,604,182 /= ஆக இருப்பினும் 2017 ஆம் ஆண்டில் தொழிற்பாட்டு இலாபமாக 2,079,547,613 /= ரூபாவை ஈட்ட முடிந்ததை அறிக்கையிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்

அரச உடைமையான பஸ்கள் இலங்கையில் மோட்டார் போக்குவரத்து கேள்வியில்8.2%ஆக உள்ளது.இ.போ.ச அரச பஸ் இயக்குனராக செயற்படுகின்றது. நாடு பூராவும் ஏறத்தாள 1500 பஸ் வழிகளில் இலாபகரமானதும் இலாபகரமற்றதுமான பஸ் வழிகளில் பயனிகட்கு அர்பணிப்புடன் சேவையில் ஈடுபட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு சராசரியாக ஏறத்தாள 4596 பஸ்களை செயலாற்றியது. இத் தொகை 2018 ஆம் ஆண்டில் 5170 பஸ்களாக உயர்ந்தது.இதற்கு காரனம் 2014 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 2200 புதிய பஸ்கள் பஸ் அணிக்கு சேர்க்கபட்டமையாகும். அத்துடன் 2017 ஆண்டில் புதிய 500 எஞ்சின் கூறுகள் இறக்குமதி செய்யப்பட்டு பழைய பஸ்களுக்கு பொருத்தப்பட்டன.

2014 ஆம் ஆண்டில் 680 சிசு சரிய பாடசாலை பஸ் சேவையினை இ.போ.ச செயலாற்றியது. இத் தொகை தற்போது 745 ஆக உயர்ந்துள்ளது. இதற்கு மேலதிகமாக 2013 ஆம் ஆண்டில் பல பஸ்கள் சிக்கனமற்ற பாதைகளில் செயலாற்றியதுடன் இதன் எண்னிக்கை 2017 ஆம் ஆணடில் அதிகரிக்கப்பட்டுள்ளது. தூர பிரதேசங்களில் வசிக்கும் மக்களின் போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்யும் முகமாக இவ்வாறு பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றது. இ.போ.ச விற்கு பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதால் ஏற்படும் நட்டங்களை ஈடு செய்வதற்கு அரசாங்கத்தால் நிதி உதவிகள் வழங்கப்படுகின்றது.

2014 ஆம் ஆண்டில் இ.போ.ச நாளாந்தம் 1,017,086 கி.மீட்டர்களை செயலாற்றியது. இத் தொகை தற்போது 1,227,800 ஆக உயர்ந்துள்ளது. புதிய பஸ்களை பஸ் அணியில் சேர்க்கப்பட்டதும் பஸ்களை புணருத்தாபனம்செய்ததும் இதற்கு காரணங்களாகும். 2014 ஆம் ஆண்டில் கிலோமீற்றருக்கான வழிப்பட்டியல் வருவாய் ரூபா 59.14 ஆக விருந்ததுடன் தற்பொழுது இது ரூபா 60.63 விற்கு அதிகரித்துள்ளது.

2014 ஆம் ஆண்டில் சராசரி நாளாந்த வழிப்பட்டியல் வருவாய் 60,154,705 /= ஆகவிருந்த்து. இத்தொகை 2017 ஆம் ஆண்டில் 744,442,500/= ரூபாவாக உயர்ந்துள்ளது. புதிய பஸ்கள் மூலம் பஸ் சேவையை பலப்படுத்தியதுடன் முகாமைத்துவ ஊழியர்களின் செயற்திறனை அதிகரித்ததும் இதற்கு காரணங்களாகும்.

2014 ஆம் ஆண்டில் பல சாலைகள் நட்டத்தில் இயங்கிவந்துள்ளது. ஆனால் தற்போது அனேகமாக எல்லா சாலைகளும் இலாபத்தில் இயங்குவதுடன் அதன் ஊழியர்களின் மாதாந்த சம்பளத்தை குறித்த தினத்தில் வழங்கி வருகின்றன. இது ஒரு போற்றத்தக்க சாதனையாக நான் என்னுகின்றேன். இதற்கு முக்கிய காரனம் இ.போ.ச அறிமுகப்படுத்திய சுயவிருப்பின் பேரில் இளைப்பாறும் திட்டத்தின் கிழ் பல ஊழியர்கள் இளைப்பாறியமையாகும்

**தலைவர்**

**இலங்கைப் போக்குவரத்துச் சபை**

மனித வளப் பகுதி

| 2014 ஆம் ஆண்டில் நியமனம் பெற்ற சாரதிகள்/நடாத்துநர்களின்/ விவர அறிக்கை | | | | |
|---|---|---|---|---|
| தொடர் இல | ஆண்டு | சாரதி தொகை | நடாத்துநர் தொகை | மொத்தம் |
| 01 | 2014 | 1532 | 1702 | 3234 |

| காலாண்டு வாரியாக 2014 ஆம் ஆண்டில் இ.போ.ச. புதிய நியமனங்கள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தொடர் இல | பதவிப் பெயர் | 2014/01/01 - 2014/03/31 | 2014/04/01 - 2014/06/30 | 2014/07/01 - 2014/09/30 | 2014/10/01 - 2014/12/31 | Total |
| 1 | பாதுகாப்பு காவலர்கள் | 0 | 0 | 2 | 1 | 3 |
| 2 | சகல தொழிலாளிகள் | 55 | 0 | 3 | 51 | 109 |
| 3 | அலுவலக பியூன்கள் | 0 | 0 | 1 | 1 | 2 |
| 4 | நடாத்துநர்கள் | 285 | 256 | 475 | 686 | 1702 |
| 5 | கணக்கு எழுது வினைஞர்கள் | 1 | 0 | 2 | 6 | 9 |
| 6 | திடீர் பரிசோதனைக் குழு பரிசோதகர்கள் | 2 | 0 | 4 | 14 | 20 |
| 7 | பொறிவலர்கள் | 45 | 13 | 4 | 33 | 95 |
| 8 | கணனி இயக்குநர்கள் | 2 | 0 | 2 | 3 | 7 |
| 9 | சாரதிகள் | 265 | 216 | 381 | 670 | 1532 |
| 10 | எழுது | 9 | 1 | 9 | 49 | 68 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | வினைஞர்கள் | | | | | |
| 11 | பரிசோதகர்கள் | 0 | 0 | 1 | 0 | 1 |
| | **மொத்தம்** | **664** | **486** | **884** | **1514** | **3548** |

| **2014 ஆம் ஆண்டில் சேவை நீடிப்பு பெற்ற நிறைவேற்று/ நிறைவேற்று அல்லாத ஊழியர்கள்** | |
|---|---|
| ஒப்பந்தம் /கடமை ஒப்படைப்பு /சேவை நீடிப்பு | **மொத்தம்** |
| ஒப்பந்தம் | 107 |
| ஒப்படைப்புகள் | 13 |
| சேவை நீடிப்புகள் | 05 |
| மொத்தம் | 125 |

| **நிறைவேற்று நியமனங்கள் பற்றிய விபரம்** | |
|---|---|
| | 2014 |
| நிரந்தர நியமனம் | 20 |
| தழுவல் நியமனம் | 106 |
| பதவி உயர்வுகள் | 39 |
| தழுவல் நியமனங்கள் நிரந்தரம் | 64 |
| இடமாற்றங்கள் | 133 |
| ஒப்பந்த நியமனஙகள் | 13 |
| புதிய ஆட்சேர்ப்புகள் | 03 |

| 2014.12.31 ஆம் தகதியன்றுள்ளவாறாக இலங்கை போக்குவரத்துச் சபையில் ஊழியர் தொகை | |
|---|---|
| **பதவிப் பெயர்** | **2014.12.31 அன்றுள்ளவாறு** |
| நிறைவேற்று | 1154 |
| நிறைவேற்று அல்லாத | 8149 |
| சாரதிகள் | 10027 |
| நடாத்துநர்கள் | 10272 |
| பொறிவலர்கள் | 5089 |
| பயிற்சி பெறுவோர் | 78 |
| மொத்தம் | 34769 |

| 2014 ஆம் ஆண்டில் மீளவேலைப் பொழிப்பு | | | | |
|---|---|---|---|---|
| **தொடர் இல** | **பதவிப் பெயர்** | **மீள நிறுவல்** | **ஒப்பந்தம்** | **மொத்தம்** |
| | சாரதிகள் | 39 | 37 | 76 |
| | நடாத்துநர்கள் | 5 | 26 | 31 |
| | பொறிவலர்கள் | 9 | 14 | 23 |
| | சாரதிகள் /நடாத்துநர்கள் /பொறிவலர்கள் தவிர்ந்தோர் | 7 | 14 | 21 |
| | **மொத்தம்** | **60** | **91** | **151** |

**செயலகப் பகுதி**

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்துவது தொடர்பான செயற்பாடுகள்.

2014 ஆம் ஆண்டில் பின்வரும் திகதிகளில் 11 சபைக் கூட்டங்கள் நடைபெற்றன.

| கூட்டம் | திகதி |
|---|---|
| 1 வது கூட்டம் | 2014/01/30 |
| 2 வது கூட்டம் | 2014/03/28 |
| 3 வது கூட்டம் | 2014/05/08 |
| 4 வது கூட்டம் | 2014/05/30 |
| 5 வது கூட்டம் | 2014/06/19 |

| | |
|---|---|
| 6 வது கூட்டம் | 2014/07/18 |
| 7 வது கூட்டம் | 2014/08/22 |
| 8 வது கூட்டம் | 2014/09/30 |
| 9 வது கூட்டம் | 2014/10/28 |
| 10 வது கூட்டம் | 2014/11/18 |
| 11 வது கூட்டம் | 2014/12/12 |

மேற்குறித்த கூட்டங்கள் தெடர்பாக நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்

1. பணிப்பாளர் சபைக் கூட்டம் நடைபெறவிருக்கும் தினத்தை குறிப்பிட்டு பணிப்பாளர் சபையின் சகல உறுப்பினர்களுக்கும் இ.போ.ச பகுதி/பிரிவு தலைவர்கட்கும் அறிவித்தல் விடுத்தல்.

2. சபை விஞ்ஞாபனங்களை பொறுப்பேற்று விஞ்ஞாபன இலக்கத்தை இட்டு பதிவு செய்ததன் பின்னர் கோவை தயாரித்து பணிப்பாளர் சபை உறுப்பினர்களிடம் கையளித்தல்.

3. பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படும் பணிப்பாளர் சபை விஞ்ஞாபனங்களுடன் தொடர்புடைய சுற்றறிக்கை கடிதங்களையும் குறிப்பிட்டு பணிப்பாளர் சபையின் கூட்ட நிகழ்ச்சி நிரலை தயாரித்தல்.

4. நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவும் தலைவரின் அறிவுறுத்தலின் பேரிலும் பணிப்பாளர் சபை விஞ்ஞாபனங்களையும் சுற்றறிக்கைக் கடிதங்களையும் சமர்ப்பித்தல்.

5. அவ்வந்த பணிப்பாளர் சபை விஞ்ஞாபனத்துக்கும் சுற்றறிக்கை கடிதங்கள் தொடர்பாகவும் பணிப்பாளர் சபை அளிக்கும் தீர்மானங்களையும் இடை நேர் விளைவான தீர்மானங்களையும் சரியாக அறிக்கையிட்டு பணிப்பாளர் சபை தீர்மானங்களை விடய இலக்கத்திற்கேற்ப தயாரித்தல்.

6. அவ்வாறு குறிப்பிட்ட பணிப்பாளர் சபைத் தீர்மானங்களுக்கு பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்ற பின்னர் அப்பணிப்பாளர் சபைத் தீர்மானங்களின் பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகளை அப்பணிப்பாளர் சபைத் தீர்மானங்களை செயற்படுத்த வேண்டிய உரிய இ.போ.ச பகுதித் தலைவர்கள்/ பிரிவுத் தலைவர்களுக்கு கையளித்தல்.

7. இந்நடவடிக்கைகள் யாவும் சரியாகவும் அந்தரங்கமாகவும் முறையாகவும் நிறைவேற்றப்படுதல்.

8. இ.போ.ச பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும் பணிப்பாளர் சபைகளுக்கு அழைக்கப்படும் பகுதி/பிரிவுத் தலைவர்கட்கும் உபசரணை அளித்தல்.

9. பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் பங்குபற்றும் (இ.போ.ச அலுவலர் அல்லாதோர்) பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு பங்குபற்றுவதற்கான படி அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

10 பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் பங்குபற்றும் (இ.போ.ச அலுவலர் அல்லாதோர்) பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு போக்குவரத்துப் படி அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

**இலங்கை போக்குவரத்துச் சபையின் காணி பூமிகள் தொடர்பான நடவடிக்கைகள் நிறைவேற்றல்**

பஸ் கம்பனிகள் தேசிய மயமாக்கப்படும் போது இலங்கை போக்குவரத்து சபைக்கு உடைமையாக்கிய, கையகப்படுத்தப்படும் சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட, கொள்வனவு செய்யப்பட்ட காணிகள் மற்றும் உரிய காணிகட்குத் தத்துவம் உள்ள நிறுவகங்களிடமிருந்து குத்தகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்ட காணிகள் தொடர்பாக இ.போ.ச பணிப்பாளர் சபையின் தலைவர், உப தலைவர், பிரதம நிறைவேற்று அலுவலர் ஆகிய உயர் முகாமைத்துவத்தின் அறிவுறுத்தல்கட்கேற்ப நிருவாக நடவடிக்கைகள் மேற்கொள்வது செயலகப் பகுதித் தலைவரின் பொறுப்பாகும். அதற்கேற்ப

1. இ.போ.ச காணிவிடயமாக பிணக்குகள் ஏற்படும் போதும் அக்காணிகள் தொடர்பாக அறிவுறுத்தல்கள் தேவைப்படும் போதும் உரிய விவரங்களை உள்ளடக்கி சபை விஞ்ஞாபனம் தயாரித்து பணிப்பாளர் சபைக்கு தகவல் அறிக்கையிடுதலும் அப்பணிப்பாளர் சபை விஞ்ஞாபனங்களுடன் தொடர்புடைய தீர்மானங்களை செயற்படுத்தலும்.

2. இ.போ.ச பொறுப்பிலுள்ள பல காணிகள் முறையாக கையகப்படுத்தப்படாமலும் உடைமையாக்கப்படாமலும் உள்ளமையால் அவற்றை கையகப்படுத்தும், உடைமையாக்கும் நடவடிக்கைகள் அது தொடர்பான சட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்காக பலதரப்பட்ட அரச தரப்பாருடன் தொடர்பு கொண்டு அந்நடவடிக்கைகளை நிறைவேற்றல்.

3. போக்குவரத்து அமைச்சரினாலும், அமைச்சினாலும் வேண்டப்படும் காணி தொடர்பான அறிக்கைகளைத் தயாரித்தல்.

4. இ.போ.ச வசமுள்ள உரிய காணிகள் இறுதியில் இலங்கை குடியரசிற்கு சொந்தமானதென சட்டமொன்று உள்ளது. அதற்கேற்ப அரச காணிகள் தொடர்பான காணி கைந்நூலின் படி காணி அமைச்சு, போக்குவரத்து அமைச்சு, இயைபுடைய பிரதேச செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள் ஆகியோருடன் இ.போ.ச தரப்பாரும் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

5. இ.போ.ச காணி தொடர்பான சட்டப்பிணக்குகள் ஏற்படும் போது நீதி மன்றத்தில் தோற்றி இ.போ.சபையின் உரிமையை நிலைநாட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

6. இ.போ.ச காணிகளில் வெளித் தரப்பார் அத்துமீறின், இயைபுடைய பொலிஸ் நிலையத்தில் முறையிட்டு அது தொடர்பான விசாரணையை முன்னெடுத்தல்.

7. இ.போ.ச காணிகளை காணி அளவையாளர், உத்தரவு பெற்ற அளவையாளர் மூலம் அளவையிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளல்.

8. வேண்டிய வேளைகளில் இ.போ.ச காணித் துண்டுகட்கு மதிப்பீட்டாளர் அறிக்கை பெறல்.

9. இ.போ.ச பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பெயரில் வெளித்தரப்பாருக்கு குத்தகைக்கு விட்டுள்ள காணிகட்கு குத்தகை அறவிடல்.

10. இ.போ.ச காணி பூமி தொடர்பாக இ.போ.ச அலுவலர் இடையே தொடர்பு ஏற்படுத்தி காணிகள் பற்றி இயைபுடைய அலுவலர்கட்கு அறிவுறுத்துரைகளும் தகவல்களும் அளித்தல்.

**செயலாற்றுப் பகுதி**

2014 ஆம் ஆண்டில் இ.போ.ச நாளொன்றுக்கு 1.9 மில்லியன் பயணிகளை ஏற்றியிறக்கியது. 5000 பஸ்களை தீவு பூராவிலும் நாளொன்றுக்கு நாளொன்றுக்கு செயலாற்றியதன் மூலமே இது சாத்தியமாயிற்று. இ.போ.ச இப் பஸ்களை பயன்படுத்தி நாடு பூராவும் செயலாற்றி பல்வேறு பொதுப் போக்குவரத்து சேவைகளை வருவாயுள்ள வழிகளிலும் வருவாயற்ற வழிகளிலும் சேவையாற்றியதுடன் விடியற்காலையிலும் பிந்திய இரவு நேரங்களிலும் செயலாற்றுவதற்கு தன்னை அர்ப்பணித்துள்ளது. அத்துடன் அலுவலகப் பயணியாளர்கட்கும், பாடசாலைச் சிறார்கட்கும் பயணஞ் செய்வதற்கு பஸ்கள் ஈடுபடுத்தப்படுகின்றன.

- வலுவிழந்த ஆட்களின் பயணத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இ.போ.ச பல வசதிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. கீழ்த்தள பஸ்கள் நகரங்களை இணைக்கும் வழிகளான கிரிபத்கொடை – பாணந்துறை / மொறட்டுவை – கொழும்பு / நீர்கொழும்பு – கொழும்பு , போன்ற வழிகளிலும் , தெற்கு, கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலைகளிலும் செயலாற்றப்படுகின்றன.

- பொது நலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டிற்கென இறக்குமதி செய்ய்யப்பட்ட 168 அதி உல்லாச பஸ்கள் இ.போ.ச விற்கு சாட்டப்பட்டு "இ.போ.ச அதி உல்லாச பஸ்கள் உல்லாச பயணிகள் சேவை" என்ற பெயரின் கீழ் உள்ள பிரிவு தாபிக்கப்பட்டு செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- பொதுப் போக்குவரத்து சேவையில் தொழினுட்ப கருவிகளின் பயன்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் இ.போ.ச டிஜிட்டல் சேரிடங்காட்டும் பலகைகள் பொருத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே 2200 சேரிடங்காட்டும் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் கொள்வனவு செய்யப்படும் பஸ்களுக்கு இவ் வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

  மேல் மாகாணம், யட்டினுவர சாலை, தென் மாகாணம், புத்தளம் மாவட்டம் ஆகிய இடங்களில் பஸ்களில் இலத்திரனியல் பயணச்சீட்டு இயந்திரங்கள் பாவனை அறிமுகப்படுத்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

- 2800 இலத்திரனியல் பயணச் சீட்டு இயந்திரங்கள் இ.போ.ச வில் பாவனையில் உள்ளன.

- தகவல் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி பொதுப் போக்குவரத்துச் சேவைகளை வினைத்திறனுடையதாக்குவது என்ற கொள்கைக் கேற்ப, இலத்திரனியல் பயணச் சீட்டு உபயோகம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 3 பாடசாலைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் தற்போது கொழும்பு, கம்பஹா, கழுத்துறை, மாவட்டங்களிலும் தென்மாகாண கதிர்காமப் பிரதேசத்திலுள்ள 85 பாடசாலைகட்கும் நீடிக்கப்பட்டுள்ளது. இலத்திரனியல் பருவகாலச் சீட்டு உபயோகிக்கும் மாணவர் தொகையை 12000 ஆக உயர்த்துவதில் இ.போ.ச வெற்றிகண்டுள்ளது.

- சிசு சறிய திட்டத்தின் கீழ் 662 பஸ்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

    - 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2012, 2013, 2014 ஆண்டுகளைக் காட்டிலும் வழிப்பட்டியல் வருவாய் அதிகரித்துள்ளது. அதற்கேற்ப 2014 ஆம் ஆண்டில் வழிப்பட்டியல் வருவாய் 2330.80 மில்லியன் ரூபாவால் உயரந்துள்ளது.

**வழிப்பட்டியல் வருவாய் உயர்வு – 2012,2013,2014**

| | 2012 | 2013 | 2014 | Rs. Mn. | % |
|---|---|---|---|---|---|
| ஜனவரி | 1,363.93 | 1,588.97 | 1,776.28 | 187.31 | 11.79% |
| பெப்ரவரி | 1,442.06 | 1,455.51 | 1,611.04 | 155.53 | 10.69% |
| மார்ச் | 1,431.33 | 1,627.02 | 1,756.20 | 129.18 | 7.94% |
| ஏப்ரல் | 1,504.81 | 1,581.25 | 1,712.38 | 151.27 | 9.69% |
| மே | 1,485.90 | 1,561.11 | 1,712.38 | 151.27 | 9.69% |
| யூன் | 1,577.13 | 1,562.53 | 1,751.56 | 189.03 | 12.10% |
| யூலை | 1,613.40 | 1,661.45 | 1,863.57 | 202.12 | 12.17% |
| ஆகஸ்ட் | 1,650.17 | 1,732.66 | 1,964.73 | 232.07 | 13.39% |
| செப்தம்பர் | 1,541.11 | 1,594.15 | 1,908.81 | 314.66 | 19.74% |
| ஒக்டோபர் | 1,558.96 | 1,646.15 | 1,979.88 | 333.73 | 20.27% |
| நவம்பர் | 1,478.07 | 1,617.13 | 1,905.63 | 288.50 | 17.84% |
| டிசம்பர் | 1,562.94 | 1,802.57 | 2,272.98 | 470.41 | 26.10% |
| மொத்தம் | 16,646.87 | 17,627.92 | 19,958.72 | 2,330.80 | 13.22% |

**சமூக நன்மைக்கு இ.போ.ச வின் பங்களிப்பு**

- **விடியற்காலை முதல் பிந்திய இரவு கடைசி பயணங்கள் செயலாற்றல்.**

இலங்கையின் பிரதேசங்கள் யாவும் அடங்கலாக விடியற்காலை முதல் பிந்திய இரவு கடைசிப் பயணங்களையும் சேவையாற்றுவதன் மூலம் நாட்டின் பொருளாதார பங்களிப்பிற்கு முதுகெலும்பாக விளங்குகிற பணியாளர்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றுவதில் இ.போ.ச ஆற்றும் சேவைகளினால் கடந்த காலங்களிலிருந்து அதற்கு ஏற்பட்ட நட்டம் சொல்லுந்தரமன்று. ஆயினும் இ.போ.ச சமூக பொறுப்பெனக் கருதி தொடர்ச்சியாக இச் சேவைகளையாற்றி வருகிறது.

- **கிராமிய பஸ் சேவை செயலாற்றல்**

கிராம பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக கிராமங்களையும் நகரங்களையும் இணைப்பதற்காகவும் இ.போ.ச வின் பங்களிப்பு எத்தகையதென்றால், வருவாயற்ற வழிகளில் செயலாற்றுவதன் மூலம் ஏற்படும் நட்டத்தையும் பொருட்படுத்தாது இ.போ.ச இச்சேவைகளை ஆற்றிவருகிறது என்பதேயாகும். இதற்கேற்ப 2013 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த 281 சிறிய பஸ்கள் பயன்படுத்தப்பட்டு கிராம வழிச் சேவைகளைப் பலப்படுத்தும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இத்தகைய சிறிய பஸ்களை கொள்வனவு செய்து இச்சேவைகளை மேலும் வலுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கையை இந்நாட்டின் பொருளாதார சுதந்திரத்திற்காக மேற்கொள்ளப்படும் சேவையாகக் கருதலாம்.

- **பாடசாலை சேவை பஸ் செயலாற்றல்**

இ.போ.ச தாங்குகின்ற பழு நாளைய எதிர்காலத்தில் சமூக பயன்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக அதிக, வருவாய் தரும் செயலாற்றல் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளாது, எம்மிடமுள்ள மட்டுப்படுத்தப்பட்ட பஸ் வண்டிகள் மூலம் எதிர்கால பரம்பரைக்கு இடமளிப்பதற்காக பாடசாலைக்குப் பிள்ளைகளை குறித்த நேரத்திற்குப் பாடசாலைகட்கு ஏற்றிச் செல்லுவதாலும், மீண்டும் வீட்டுக்குக் கொண்டு செல்வதாலும் இதன் மூலம் தேசிய செயலாற்றலில் இ.போ.ச ஈடுபட்டுள்ளது.

- **தேசிய விழாக் காலங்களில் நடைபெறுகின்ற பஸ் சேவைகள்**

  சிங்கள, தமிழ், புத்தாண்டு விழா, வெசாக், பொசோன் விழா, கண்டி, கதிர்காம அசல பெரகெர விழா, சிவனொளிபாத மலை சேவை ஆகிய சமய முக்கியத்துவம் வாயந்த விழாக்களுக்கும் விசேட பஸ் சேவைகளை இ.போ.ச செயலாற்றி சமூக விருந்தோம்புனராக செயற்படுகிறது.

- **பருவகாலச் சீட்டு சேவை**

  பாடசாலை, பல்கலைக்கழகங்கள், வயது வந்தோர் ஆகிய பல்வேறு மட்டத்தினரினதும் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு இ.போ.ச மேற்கொள்ளும் நடவடிக்கை மூலம் நாட்டிலுள்ள பயணம் செய்யும் பொது மக்கட்கு பொருளாதார ரீதியாக நிவாரணம் கிட்டுகிறது. பழைய பருவகாலச் சீட்டுகட்கு பதிலாக நவீன தொழினுட்ப ரீதியான இலத்திரனியல் பருவகாலச் சீட்டுகளை அறிமுகப்படுத்தல் இ.போ.ச.வால் தொடங்கப்பட்டுள்ளதுடன் தற்போது கொழும்பு, கம்பஹா, கழுத்துறை, கதிர்காமம் ஆகிய பிரதேசங்களில் இது ஏற்கனவே உபயோகத்திலுள்ளது.

- **அதிவேக நெடுஞ்சாலைகளில் போக்குவரத்துச் சேவை**

  இலங்கையின் வீதி முறையில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அதிவேக நெடுஞ்சாலை முறைக்குள் செயலாற்றுவதற்கு விதந்துரைக்கப்பட்ட பஸ்களை ஈடுபடுத்துவதன் மூலம் பயணிப் போக்குவரத்து நடவடிக்கைகளில் இ.போ.ச ஈடுபடக்கூடியதாயிற்று. அதற்கேற்ப தற்போது இலங்கையில் அதிவேக நெடுஞ்சாலை முறையூடாக செயலாற்றும் எமது உல்லாச பஸ்கள் நவீன உலகிற்கேற்றவாறு அமைந்துள்ளன.

- **சமாந்தரமான போக்குவரத்துச் சேவைகள் செயலிழக்கும் போது இ.போ.ச அளிக்கும் சேவை**

  சமாந்திரமான போக்குவரத்துச் சேவைகளில் அடிக்கடி ஏற்படுகின்ற செயலிழப்பினால் நிர்க்கதிக்கு உள்ளாகும் எமது மக்களுக்கு விசேட நிவாரண

சேவை வழங்குவது இ.போ.ச வாகும். எம்மிடமுள்ள பஸ் வண்டிகள் மூலம் கிராமங்களிலும் நகரங்களிலும் செயலாற்றும் பல்வேறு சந்தரப்பங்களில் இடருறும் மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை இ.போ.ச அளித்து நாட்டின் சார்பில் அதிஉச்ச சேவை வழங்கப்படுகிறது.

- கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது தினமும் செயலாற்றலுக்கு விடுக்கப்படும் பஸ்கள் தொகையும், தினமும் உண்மையில் சேவையாற்றப்படும் பஸ்கள் தொகையும் உயர்வடைந்துள்ளன. 2012, 2013 ஆம் ஆண்டுகளில் நாளொன்றுக்கு செயலாற்றப்பட்ட சராசரி பஸ்களின் எண்ணிக்கை 4631 ஆகும். 2014 ஆம் ஆண்டிலும் இதேயளவு பேணப்படுகிறது.

- 2014 ஆம் ஆண்டினிறுதியில் நாளொன்றுக்கு செயலாற்றப்படும் சராசரி கிலோ மீட்டர் தொகை 1,005,098 ஆகும். கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது செயலாற்றப்படும் மைற் தொகையில் உயர்ச்சி காணப்படுகிறது.

**திடீர்ப் பரிசோதனைக் குழு (தீவடங்கிலும்)**

| மாதம் | குழுக்கள் எண்ணிக்கை | செவ்வை பார்த்தல் எண்ணிக்கை | செவ்வை பார்த்த பஸ்கள் எண்ணிக்கை | பாரதூரமான குற்றங்கள் (IV) | சிறு குற்றங்கள் (V) | தண்டம் விதித்த பயணிகள் எண்ணிக்கை | விதித்த தண்டப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 96 | 1,050 | 15,891 | 119 | 323 | 708 | 240,482.00 |
| பெப்ரவரி | 91 | 993 | 14,872 | 120 | 324 | 636 | 220,051.00 |
| மார்ச் | 102 | 1,047 | 15,354 | 113 | 363 | 681 | 237,846.00 |
| ஏப்ரல் | 121 | 1,151 | 16,957 | 114 | 326 | 731 | 255,405.00 |
| மே | 97 | 1,005 | 15,725 | 115 | 316 | 654 | 214,075.00 |
| யூன் | 91 | 1,016 | 15,141 | 103 | 294 | 553 | 182,269.00 |
| யூலை | 103 | 969 | 16,457 | 89 | 265 | 544 | 190,672.00 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆகஸ்ட் | 65 | 1,034 | 15,094 | 60 | 220 | 379 | 132,578.00 |
| செப்தம்பர் | 117 | 959 | 13,587 | 68 | 225 | 408 | 141,057.00 |
| ஒக்டோபர் | 95 | 1,051 | 15,402 | 116 | 251 | 498 | 182,189.00 |
| நவம்பர் | 81 | 1,056 | 14,902 | 113 | 243 | 480 | 162,261.00 |
| டிசம்பர் | 45 | 854 | 12,253 | 65 | 166 | 329 | 111,536.00 |
| மொத்தம் | **1,104** | **12,185** | **181,635** | **1195** | **3,316** | **6,601** | **2,270,421.00** |

**திடீர்ப் பரிசோதனைக் குழு (மத்திய)**

| மாதம் | குழுக்கள் எண்ணிக்கை | செவ்வை பார்த்தல் எண்ணிக்கை | செவ்வை பார்த்த பஸ்கள் எண்ணிக்கை | பாரதூரமான குற்றங்கள் (IV) | சிறு குற்றங்கள் (V) | தண்டம் விதித்த பயணிகள் எண்ணிக்கை | விதித்த தண்டப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 11 | 191 | 3549 | 50 | 69 | 323 | 105,180.00 |
| பெப்ரவரி | 11 | 130 | 2533 | 40 | 52 | 224 | 72,938.00 |
| மார்ச் | 12 | 135 | 2757 | 43 | 51 | 228 | 76,263.00 |
| ஏப்ரல் | 12 | 155 | 2985 | 45 | 46 | 227 | 76,411.00 |
| மே | 12 | 164 | 3182 | 57 | 53 | 240 | 75,956.00 |
| யூன் | 12 | 164 | 2926 | 43 | 58 | 219 | 74,837.00 |
| யூலை | 11 | 141 | 2569 | 36 | 41 | 177 | 59,741.00 |
| ஆகஸ்ட் | ஆகஸ்ட் 1 ஆம் திகதி மத்திய திடீர்ப் பரிசோதனைக் குழு கலை க்கப்பட்டு 2014.09.01 ல் மீள நிறுவப்பட்டது | | | | | | |
| செப்தம்பர் | 05 | 33 | 648 | 25 | 12 | 60 | 20,968.00 |
| ஒக்டோபர் | 05 | 86 | 1585 | 62 | 43 | 144 | 52,878.00 |
| நவம்பர் | 05 | 87 | 1515 | 65 | 40 | 144 | 53,378.00 |
| டிசம்பர் | 05 | 80 | 1199 | 31 | 22 | 86 | 26,650.00 |
| மொத்தம் | **101** | **1,366** | **25,448** | **497** | **487** | **2,072** | **695,200.00** |

**ஊடகப் பிரிவு**

1. 2014 ஆம் ஆண்டின் போக்குவரத்து அமைச்சின் அலுவலக வெளியீடான நிபந்த சரிசர பத்திகையின் சில தொகுதிகளைப் பிரசுரிப்பதும் அவற்றை போக்குவரத்து அமைச்சிற்கு சொந்தமான சகல நிறுவக ஊழியர்கட்கு சந்தைப்படுத்தலும்.

2. நாடோறும் பத்திரிகைகளில் பிரசுரமாகும் இ.போ.ச தொடர்பான செய்திகளை உரிய பகுதித் தலைவர்கட்கு தெரியப்படுத்தி சம்பந்தப்பட்ட தகவல் சகிதம் பத்திரிகை அறிக்கைகளைப் பாதுகாத்தல், இ.போ.ச விற்கு ஊடாக அறிவித்தல்களையும் செய்தி அறிக்கைகளையும் தயாரித்து வினியோகித்தல்.

3. இ.போ.ச விசேட விழாக்களின் போது ஊடக அனுசரணை அளிப்பதும், அறிவித்தல்களை விசேட செய்தி ஊடகங்கள் மூலம் பிரச்சாரப்படுத்த நடவடிக்கை எடுத்தலும்.

4. இ.போ.ச மூலம் பொதுமக்கட்கு செயலாற்றப்படுகின்ற, செயலாற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள விசேட சிறு திட்டங்கள் தொடர்பான விவரங்களை ஊடகப் பகுதிக்குத் தெரியப்படுத்துவதன் மூலம் இ.போ.ச தொடர்பான ஆக்கபூர்வ உளச்சார்பை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி இ.போ.ச வருவாயை பெருக்குவதற்குப் பங்களித்தல்.

5. இ.போ.ச தொடர்பான சகல அழைப்புகள், ஆட்சேர்ப்பு தொடர்பான பத்திரிகை அறிவித்தல்கள் அரச பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

6. ஊடக அலகின் கீழ் செயற்படுகின்ற பிரதி வணிக அதிகாரி அலுவலகத்தில் இ.போ.ச சுற்றுலா வங்களாக்கள், சாலிகா விளையாட்டரங்கு, சாலிகா மண்டபம் தொடர்பான சகல அலுவல்களையும் நிருவகித்தலும் கண்காணித்தலும்.

7. இ.போ.ச தலைமையலுவலகத்திலுள்ள நூலகத்தை நடாத்திச் செல்வதும் அதனுடன் தொடர்புடைய சகல நிருவாக நடவடிக்கைகளை கண்காணித்தலும்.

**தொழினுட்ப பகுதி**

2014 ஆம் ஆண்டில் பஸ் அணி பராமரிப்புக் கென பழுதுபார்க்கப்பட்ட எஞ்சின்கள், கியர்ப் பெட்டிகள், பஸ் உடற்கோப்புகள், இதர பகுதிகள் ஆகியவற்றின் விவரம்.

| விவரம் | தொகை |
|---|---|
| பழுது பார்க்கப்பட்ட எஞ்சின்கள் தொகை | 613 |
| பழுது பார்க்கப்பட்ட கியர் பெட்டிகள் தொகை | 413 |
| பழுது பார்க்கப்பட்ட உடற் கோப்புகள் தொகை | 272 |
| புதிய பஸ்கள் தொகை | 1937 |
| அம்பாறை தயர் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட முன்பதனிடப்பட்ட தயர்கள் தொகை | 12191 |
| பழுதுபார்த்த பஸ் உடற்கோப்பு உறுப்புகள் தொகை | 3204 |
| பழுதுபார்த்த எரிபொருள் பம்பி உட்பாய்ச்சிகள் தொகை | 413 |

**பாதுகாப்புப் பிரிவு**

01. தேவையான பாதுகாப்பு சாவடிகள்/ பாதுகாப்பு முனைகள் தாபித்து அசையும் அசையாச் சொத்துக்களைப் பாதுகாத்து, ஊழியர்களின் ஒழுக்காற்று மட்டத்தைப் பேணக் கூடிய வகையில் கண்காணித்து, விசேட கொண்டாட்டங்களுக்கு வருகை தரும் அதிதிகட்கு பாதுகாப்பு அளித்தல்

02. பாதுகாப்பு புலனாய்வு வேலையைத் தொடர்ந்து நடாத்துதல், தீயணைப்பு தொடர்பான பயிற்சிப் பாசறைகளை நடாத்துதல், தீயணைக்கும் உபகரணங்களை பழுதுபார்த்தல்.

03. இ.போ.ச விற்கு அனுப்பப்படும் முறையீடுகள், ஒழுங்கீனங்கள், குறைகள் ஆகியவற்றை ஆராய்ந்து விசாரித்தல், குற்றம் சாட்டப்பட்டவருக் கெதிராக

ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள உதவுதல், தொழில் மன்றிலும் நீதி மன்றங்களிலும் வழக்குகளில் தோற்றல்.

04. இ.போ.ச அலுவலக விடயங்களில் விசேட அல்லது பிரச்சினைக்குரிய நிலைமையின்போது சட்டபூர்வமாக நடந்து கொள்ளல்.

05. சேவையிலுள்ள சகல ஊழியர்கட்கும் இலவச பயணச் செல்கைச் சீட்டுக்கள் வழங்கும் போது கண்காணித்து முழுப் பொறுப்புடன் நடந்து கொள்ளல்.

06. உள்ளூர் கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் யாவற்றிற்கும் சபை நடைமுறைப்படி வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளல்.

07. அமைச்சர், பிரதி அமைச்சர், தலைவர், உபதலைவர், இதர உயர் அலுவலர்களை சந்திக்க வருபவர்களையும் இ.போ.ச விற்கு சொந்தமான வேலையிடங்களில் இருந்து வரும் ஊழியர்களையும் தலைமையலுவலகத்திலுள்ள விசாரணை பீடத்தில் ஆளடையாளம் கண்டு கண்காணிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.

08. பாதுகாப்பு பிரிவிற்கு ஆட்சேர்ப்பதற்கு நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைகட்கு முழு உதவியளித்தல்.

09. இயைபற்ற கடமைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களைப் பாதுகாப்புப் பிரிவிற்கு ஆட்சேர்ப்பதற்கு முறையான நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல்.

10. நிதி மீளநிரப்பும் அடிப்படையில் முப்படைகளில் இருந்தும் சட்ட பூர்வமாக விலகியவர்கள் பின்வரும் இடங்களில் பாதுகாப்பு காவலர்களாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்: மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் நாராஹேன்பிட்டி, வெரகெரை, தனியார் போக்குவரத்து திணைக்களம், பஸ்தியன் மாவத்தை போக்குவரத்து வலயம், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நாராஹேன்பிட்டி, வைத்திய நிலையம் நுகேகொடை, அதனுடன் இணைந்த கண்டி மருத்துவ நிலையம், கம்பஹ மருத்துவ நிலையம்.

11. பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பஸ்கள் ஏல விற்பனையின் போது பாதுகாப்பு காவலர்களை ஈடுபடுத்தல்.

**விசேட புலனாய்வுப் பிரிவு**

2014 ஆம் ஆண்டில் விசேட புலனாய்வு பிரிவு அதனிடம் முகாமை ஒப்படைத்த 100 புலனாய்வுகளைப் பூர்த்தி செய்தது.

**தகவல் , தொடர்பாடல், தொழினுட்பவியல் பகுதி**

நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்

01. 100 கணனி இயந்திரங்கள் கொள்வனவு
02. 50 அச்சிடும் இயந்திரங்கள் கொள்வனவு
03. 150 UPS இயந்திரங்கள் கொள்வனவு
04. 2200 இலத்திரனியல் பஸ் பயணச்சீட்டு இயந்திரங்கள் கொள்வனவு
05. உள்ளூர் பிராந்திய வலையமைப்புத் திட்டத்தை (LAN) செயற்படுத்தல்.
06. இறுதிக் கணக்குத் தயாரிப்பதற்கு மென்பொருள் கொள்வனவு.
07. சம்பளம் தயாரிப்பதற்கு மென்பொருள் செயற்படுத்தல்
08. உரிய மென்பொருளில் இ.போ.ச ஊழியர்கட்கு பயிற்சியளித்தல்
09. இ.போ.ச தலைமையலுவலகத்திலும் சாலைகளிலும் கணினிகளிலும் அது தொடர்பாக ஏற்படும் நாளாந்த பிரச்சினைகளைத் தீர்த்து கணனி பராமரிப்பை நிருவகித்து பணிப்புரைகள் வழங்கி வேண்டிய நடவடிக்கை எடுத்தல்.

**அபிவிருத்தி திட்டமிடல் பிரிவு**

01 வரவு செலவு திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் ஐந்து ஆண்டுகட்கு கூட்டிணைந்த திட்டம் தயாரித்தல்.

02 வரவு செலவு திட்டத்தை அடிப்படையாக் கொண்டு எதிர்வரும் ஆண்டுக்கான செயற்திட்டத்தை தயாரித்தல்.

03 செயற்திட்டத்திற்கான  மாதாந்த முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்தல்

04 செயற்திட்டத்திற்கான காலாண்டு முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்தல்

05 போக்குவரத்து அமைச்சு கோரும் பல்வேறு அறிக்கைகளை தயாரித்து சமர்ப்பித்தல்.

06 இலங்கை மத்திய வங்கி, புள்ளி விவரத் திணைக்களம் ஆகிய நிறுவகங்கள் கோரும் அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பித்தல்.

07 இதர அரச நிறுவகங்கள் கோரும் அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பித்தல்.

08 மாதாந்த இலாப நட்ட அறிக்கை தயாரித்து சம்ர்ப்பித்தல்.

09 மாதாந்த இலாப நட்ட அறிக்கைக்குரிய பொழிப்புரை தயாரித்து சமர்ப்பித்தல்.

10 மாதாந்த பருவகாலச் சீட்டு அறிக்கை தயாரித்து சமர்ப்பித்தல்.

11 பொறுப்புக்கள் அறிக்கை தயாரித்தல்

## உள்ளகக் கணக்காய்வு பகுதி

### நிதிப் பகுதி

01. கணக்காய்வு திட்டத்தையும் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தையும் தயாரித்தல்.
02. காசு சரி பார்த்தல்
03. காசேடு செவ்வை பார்த்தல்
04. சம்பளம் மேலதிக நேர வேலை செவ்வை பார்த்தல்
05. சம்பளம், விழா முற்பணப்  பதிவேடு செவ்வை பார்த்தல்

06. நடாத்துநரின்  சோர்வுப் பணம் செவ்வை பார்த்தல்

07. பணிக்கொடை கொடுப்பனவு செவ்வை பார்த்தல்

08. நாளாந்த மொத்த பதிவேடு செவ்வை பார்த்தல்

09. உள்ளூர் கொள்வனவை செவ்வை பார்த்தல்

10. இறுதிக் கணக்குகள் கணக்காய்வு

11. கணக்குப் பகுதியின் இதர பதிவேடுகளை செவ்வை பார்த்தல்

**தொகைக்  களஞ்சியம்**

01. பருவகாலச் சீட்டு பதிவேடு செவ்வை பார்த்தல்

02. களஞ்சியப் பொருள் செவ்வை பார்த்தல்

03. எரிபொருள் நுகர்வு செவ்வை பார்த்தல்

04. மாற்றுறுப்புகள் நுகர்வு செவ்வை பார்த்தல்

05. டயர் நுகர்வு செவ்வை பார்த்தல்

06. வில்லுத் தகடுகள் நுகர்வு செவ்வை பார்த்தல்

07. கைதவிர்ப்பு செயற்பாடுகள்

**செயலாற்றுப் பகுதி**

01. வழிப்பட்டியல்  செவ்வை பார்த்தல்

02. மாற்றுறுப்புக்கள் மிகை உபயோகம் செவ்வை பார்த்தல்

03. உரிய காலத்திற்கு முன் பழுதடைந்த மாற்றுறுப்புகள் செவ்வை பார்த்தல்

04. பொறியியல் பகுதியின் இதர பதிவேடுகளை செவ்வை பார்த்தல்.

**ஏனையவை**

01. ஒழுக்காற்று பதிவேடுகளை செவ்வைபார்த்தல்

02. விடுதலைப் பதிவேடுகளை செவ்வை பார்த்தல்

03. சபைச் சொத்துக்களை செவ்வை பார்த்தல்

04. சாரதிப் பயிற்சிப் பாடசாலைகளின் வருவாய், செலவு, பேணல், நிருவாகம், ஆகிய பகுதிகளை கணக்காய்விற்கு உட்படுத்தல்

05. சுற்றுலா வங்களாக்களை செவ்வை பார்த்தல்

06. ஷாலிகா மண்டபம், விளையாட்டரங்கு செவ்வை பார்த்தல்

07. தலைமையலுவலகத்தின் பொதுச் செலவுகள் பகுப்பாய்வு (நீர்,தொலைபேசி, மின்சாரம், எழுதுகருவிவகை)

08. அரச கொள்கை, பணிப்பாளர் சபைத் தீர்மானங்கட்கிணங்க செயற்படுத்தப்பட்ட விசேட செய்திட்டங்கள்

09. பிரந்திய உள்ளகக் கணக்காய்வாளர்களின் மாதாந்த மாநாடு நடாத்தல்

10. பிராந்திய ரீதியாக கணக்காய்வு, முகாமைக்குழுக் கூட்டங்களை நடாத்துதல்

11. தலைவர் கட்டளையிடும் விசேட செவ்வை பார்த்தல்கள்

12. பிராந்திய ரீதியாக ஆண்டுதோறும் கணக்காய்வு மாநாடுகளை நடாத்துதல்

**2014 ஆம் ஆண்டுக்கான கேள்விப்பத்திரங்கள்**

| தொடர் இல | கேள்விப்பத்திர இல | மேற்கொண்ட செயற்பாடுகள் | தற்போதைய நிலையும் முன்னேற்றமும் |
|---|---|---|---|
| 01 | SLTB/TS/GEN/2014/01 | 15 உல்லாச பஸ்களை கொள்வனவு செய்தல் | கொள்வனவு செய்யப்பட்டது |
| 02 | SLTB/TS/GEN/05/2014 | இ.போ.ச செயலாற்றுப் பகுதிக்கு | மீண்டும் கூறுவிலை |

| | | | |
|---|---|---|---|
| | | ஆளடையாளஅட்டை அச்சிடும் இயந்திரத்திற்கான (Fargo HDP 8500) கூறுவிலை 1-ம் தடவை | கோரப்பட்டுள்ளன |
| 03 | SLTB/TS/Civil/01/2014 | இ.போ.ச தங்கல்ல சாலை சிற்றின மலுவ கைத்தொழில் பேட்டை புதிதாக நிருமாணித்தல் | நிருமாணிக்கப்படவில் லை |
| 04 | SLTB/TS/GEN/05/2014 | சகல சாலைகட்கும் 2014 ஆம் ஆண்டுக்குத் தேவையான அச்சிட்ட படிவங்களை அச்சிடல் | கூறுவிலைகள் அனுமதிக்கப்பட்டு சாலைகளிடம் தேவைகளைத் தெரி யப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது |
| 05 | SLTB/TS/GEN/07/2014 | ஊறு கொடவத்தையிலுள்ள இ.போ.ச எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு பெற்றோல் பம்பியொன்றைக் கொள்வனவு செய்தல் | கொள்வனவு செய்யப்பட்டது |
| 06 | SLTB/TS/Civil/2014/02 | பாதுகாப்புப் பிரிவிற்கும் புலனாய்வுப் பிரிவிற்கும் இடையே அலுமினிய பிரிவீட்டுக்கான கூறுவிலை கோரல் | பூர்த்தியாகிற்று |
| 07 | SLTB/TS/GEN/2014/ 10/01 | தலைமையலுவலகத்திற்கு "ஸ்கானிங்" இயந்திரத்திற்கான கூறுவிலைகள் | கொள்வனவு செய்யப்பட்டது |
| 08 | SLTB/TS/GEN/38/ 2014/01 | இ.போ.ச றுகுணு, வயம்ப, | கொள்வனவு |

| | | | |
|---|---|---|---|
| | | பிராந்தியங்கட்கு 3 "காப்" வண்டிகள் கொள்வனவு செய்தல் | செய்யப்பட்டது |
| 09 | SLTB/TS/GEN/24/2014 | 32-2041, இலக்க ஜீப் வண்டிக்கு முழு உடற்கோப்பு பழுதுபார்த்தலுக்கான கூறுவிலைகள் கோரல் | பூர்த்தி செய்யப்பட்டது |
| 10 | SLTB/TS/GEN/05/2014 | இ.போ.ச செயலாற்றுப் பகுதிக்கு ஆளடையாள அட்டை அச்சிடும் இயந்திரத்திற்கான (Fargo HDP 8500) கூறுவிலை 2-ம் தடவை | பூர்த்தி செய்யப்பட்டது |
| 11 | SLTB/TS/GEN/10/2014 | 'மல்டிமீடிய" ஒளிகுவிந்து வீசச் செய்யும் இயந்திரம் ஒன்றை இ.போ.ச பயிற்சிப் பிரிவிற்கு கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை | பூர்த்தி செய்யப்பட்டது |
| 12 | SLTB/TS/GEN/10/2014 Civil/03 | இரத்மலானை சாலையில் பாதுகாப்பு வேலி நிருமாணிப்பதற்கான கூறுவிலை | கூறுவிலை மீளக் கோரப்பட்டுள்ளது |
| 13 | SLTB/TS/GEN/10/2014 | மொறட்டுவை மாதிரி நடாத்துநர் பயிற்சிப் பாடசாலையின் படுக்கை கூடத்திற்கு உருக்கு "பீரோ" கொள்வனவு செய்தல் | பூர்த்தியாக்கப்பட்டுள்ளது |
| 14 | SLTB/TS/GEN/10/2014 | தலைமையலுவக இ.போ.ச மனிதவள முகாமைப் பகுதிக்கு பிளாஸ்டிக் கதிரைகளை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலைக் கோரல் | பூர்த்தியாக்கப்பட்டுள்ளது |

| | | | |
|---|---|---|---|
| 15 | SLTB/TS/GEN/19/ II/2014 | நாள் முத்திரை, பதவிப் பெயர் முத்திரை ஆகியவற்றை இ.போ.ச தலைமையலுவலகத்திற்கு ஏற்பாடு செய்தல் | தேவைக்கேற்ப |
| 16 | SLTB/TS/GEN/02/2014 | மோட்டார் வாகனங்கட்கான மாற்றுறுப்புகளுக்கான கூறுவிலை கோரல் | ஆண்டு தேவைக்கேற்ப |
| 17 | SLTB/TS/GEN/191/2014 | டோனர்ஸ், காட்றிஜ்ஜஸ், மை றிபன்ஸ் ஆகியவற்றுக்கான கூறுவிலை | ஆண்டு தேவைக்கேற்ப |
| 18 | SLTB/TS/GEN/26/2014/II | 50 சிறி 7925 மிற்சுபிசி டெலிக்கா வானுக்கு முழு உடற்கோப்பு பழுதுபார்த்தலுக்கான கூறு விலை கோரல் | பூர்த்தியாக்கப்பட்டது |
| 19 | SLTB/TS/GEN/62/2014 | இ.போ.ச சாலைகளில் எரிபொருள் வினியோகிக்கும் பம்புகட்கு புதிய டிஜிட்டல் மானி பொருத்துவதற்கான கூறுவிலை கோரல் | பெறப்படவில்லை |
| 20 | SLTB/TS/Civil/2014/16/IV | ஷாலிகா மைதானத்தின் எல்லைச் சுவர் பழுதுபார்த்தலுக்கான கூறுவிலை | பூர்த்தியாக்கப்பட்டது (சிவில் பொறியியல் பகுதியால்) |
| 21 | SLTB/TS/Civil/2014/13/V | கட்டுபெத்த முகாமைப் பயிற்சி சேவை மத்திய நிலையத்தின் | பூர்த்தியாக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | எல்லைச் சுவர் (144-0) நிருமாணத்திற்கான கூறுவிலை | |
| 22 | SLTB/TS/Civil/2014/16/VI | இரத்மலானை சாலை பழைய கட்டடத்தை இடித்து அகற்றல் | பூர்த்தியாக்கப்பட்டது |
| 23 | SLTB/TS/GEN/07/2014/I | இ.போ.ச விற்கு வளிச் சீராக்கி கொள்வனவு | பூர்த்தியாக்கப்பட்டது |
| 24 | SLTB/TS/GEN/07/2014/II | இ.போ.ச தலைமையலுவலகத்திற்கு தேவைப்படும் மின்பிறப்பாக்கியொன்றைக் கொள்வனவு செய்வதற்கு கூறுவிலை கோரல் | கொள்வனவு செய்யப்பட்டது |
| 25 | SLTB/TS/GEN/07/2014/III | ஊறுகொடவத்தையிலுள்ள எரிபொருள் நிரம்பும் நிலையத்திற்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான கூறுவிலைகள் கோரல் | அங்கீகரிக்கப்பட்ட கூறுவிலைப்படி கொள்வனவு செய்யப்பட்டது. |
| 26 | SLTB/TS/GEN/39/2014 | இ.போ.ச சாரதிப் பயிற்சிப் பாடசாலைகட்கு இலகு கொடுப்பனவு அடிப்படையில் இரட்டைத் தேவைகளுடைய புதிய 12 வான்கள் பெற்றுக் கொள்ளல் | பெற்றுக் கொள்ளப்படவில்லை |
| 27 | SLTB/TS/Civil/2014/16/VII | கெஸ்பாவை சாலையிலுள்ள கணக்கீட்டு அலுவலகத்தில் புதிய | சாலையால் பூர்த்தி செய்யப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | பிரிவீட்டுப் நிருமாணப் பணி | |
| 28 | SLTB/TS/GEN/63/2014 | “யூடொங் ” பஸ்கட்கு தளகம்பளம் கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை கோரல் | கூறுவிலைகள் அனுமதிக்கப்பட்டு சாலைத் தேவைக்கேற்ப கொள்வனவு செய்யப்பட்டது |
| 29 | SLTB/TS/Civil/2014/16/VIII | கழுத்துறைச் சாலையிலுள்ள சாரதிப் பயிற்சிப் பாடசாலையின் மலசலகூட தொகுதியை பழுதுபார்ப்பதற்கான கூறுவிலை | ----------- |
| 30 | SLTB/TS/Civil/2014/16/IX | கட்டுபெத்தை முகாமை பயிற்சி மத்திய நிலையத்திற்கு அகலமான “கேற்” 20’-0” அமைப்பதற்கு கூறுவிலை | பூர்த்தியாக்கப்பட்டது |
| 31 | SLTB/TS/GEN/65/2014 | 36 ஆசனங்களுடைய 2 கதவுகளுடைய 02 “C” மாதிரி பஸ்கள் கொள்வனவு செய்தல் | கொள்வனவு செய்யப்பட்டது |
| 32 | SLTB/TS/GEN/07/2014/IV | இ.போ.ச விற்கு ஒளிப்படப் பிரதி இயந்திரத்திற்கான கூறுவிலை | பூர்த்தியாக்கப்பட்டது |
| 33 | SLTB/TS/GEN/28/2014 | 2000 பற்றறிகள் கொள்வனவு செய்வதற்கான கூறுவிலைகள் கோரல் | தேவைக்கேற்ப கொள்வனவு செய்யப்பட்டது |
| 34 | SLTB/TS/GEN/64/2014 | இ.போ.ச விற்கு 20-25 ஆசனங்களுடைய 5 பஸ்களைக் கொள்வனவு செய்வதற்கான | கொள்வனவு செய்யப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | | கூறுவிலைகள் கோரல் | |
| 35 | SLTB/TS/GEN/26/III/2014 | இ.போ.ச விற்கு ஆளடையாள அட்டை அச்சிடும் பொருட்கள் கொள்வனவிற்கான கூறுவிலை | பூர்த்தியாக்கப்பட்டது |
| 36 | SLTB/TS/GEN/05/iv/2014 | இ.போ.ச தலைமையலுவலகத்திற்குத் தேவையான விலைப்பட்டியல்களை அச்சிடுவதற்கான கூறுவிலை கோரல் | ஏறத்தாழ 200 பட்டியல்கள் அச்சிட்டு பெற்றுக் கொள்ளப்பட்டன |
| 37 | SLTB/TS/GEN/66/2014 | இ.போ.ச விற்கு 5000 பாவித்த டயர்களை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை கோரல் | கொள்வனவு செய்யப்படவில்லை |
| 38 | SLTB/TS/GEN/26/2014 | 252 - 2847 இக்கமுடைய டவுன் ஏஸ் டொயாட்டா வானுக்கு முழு உடற்கோப்பு பழுதுபார்த்தலுக்கான கூறுவிலை கோரல் | பூர்த்தியாக்கப்பட்டது |
| 39 | SLTB/TS/GEN/05/v/14 | சாரதிப் பயிற்சியின் பின்னர் அளிக்கப்படும் சான்றிதழ்கட்கான கூறுவிலை கோரல் | திட்டமிட்ட தொகை கொள்வனவு செய்யப்பட்டது |
| 40 | SLTB/TS/GEN/05/VI/2014 | இ.போ.ச கடிதத் தலைப்புகள் அச்சிடுவதற்கான கூறுவிலை கோரல் | கூறுவிலைகள் இரண்டாவது தடையாவது கோரப்பட்டுள்ளன |

| | | | |
|---|---|---|---|
| 41 | SLTB/TS/GEN/02/2014/II | மோட்டார் மாற்றுறுப்புக்கள் கொள்வனவிற்கான கூறுவிலை கோரல் | ஆண்டு தேவைக்கேற்ப |
| 42 | SLTB/TS/GEN/36/2014 | இ.போ.ச சாலைகளில் உபயோகிக்கப்படும் GPRS பயணச்சீட்டு இயந்திரங்கட்குத் தேவையான பயணச்சீட்டு சுருள்கள் (தேமல் கடதாசி) கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை கோரல் | ஆண்டு தேவைக்கேற்ப |
| 43 | SLTB/TS/GEN/04/2014 | இ.போ.ச பஸ்கட்குத் தேவையான "எனாமல்" வர்ணமும், துணைப் பகுதிகளும் கொள்வனவு செய்தல் | ஆண்டு தேவைக்கேற்ப |
| 44 | SLTB/TS/GEN/07/V/2014 | ஊறுகொடவத்தை/இரத்மலானை எரிபொருள் நிரப்பும் நிலையங்கட்குத் தேவையான 2 எரிபொருள் பம்பிகளைக் கொள்வனவு செய்தல் | பெறப்படவில்லை |
| 45 | SLTB/TS/GEN/05/vii/2014 | சாரதிப் பயிற்சியின் பின்னர் அளிக்கப்படும் சான்றிதழ்கட்கான கூறுவிலை கோரல் | திட்டமிட்ட தொகை கொள்வனவு செய்யப்பட்டது |
| 46 | SLTB/TS/GEN/67/I/2014 | இ.போ.ச விற்குத் தேவையான 33-37 ஆசனங்களுடைய 10 பஸ்களுக்கான கூறுவிலை கோரல் | பெறப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| 47 | SLTB/TS/GEN/05/VIII/2014 | பொருட்கள் கட்டளையிடும் , பொருட்கள் வினியோகிக்கப்படும் படிவங்களுக்கும் பொருட்களை ஏற்றுக் கொள்ளும் உறுதிச் சீட்டுகட்கும் கூறுவிலை கோரல் | திட்டமிட்ட தொகை பெற்றுக் கொள்ளப்பட்டது |
| 48 | SLTB/TS/GEN/07/VI/2014 | ஊறுகொடவத்தை/இரத்மலானை எரிபொருள் நிரப்பும் நிலையங்கட்குத் தேவையான 2 எரிபொருள் பம்பிகளைக் கொள்வனவு | இரத்மலானைக்கு மட்டும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |
| 49 | SLTB/TS/GEN/65/2014 | அதிவேக நெடுஞ்சாலையில் செயலாற்றப்படும் பஸ்கட்குத் தேவையான தயர்க்கூறுகளையும், றேடியல் தயர்களையும் (ரியூப் அற்ற தயர்கட்கான) கூறுவிலை கோரல் | மேல்நடவடிக்கைக்காக வழங்கற் பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| 50 | SLTB/TS/GEN/07VII/2014 | இ.போ.ச மல்லாகம் சாலைக்கு வேண்டிய பொறிவிருட்சம் பொறித்தொகுதிக்கான கூறுவிலை | சாலை மூலமான கொள்வனவிற்கு அங்கீகரிக்கப்பட்ட கூறுவிலைகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. |
| 51 | SLTB/TS/GEN/67/2014 | 15-20 ஆசனங்களுடைய 5 சிறிய பஸ்கள் கொள்வனவு | ------------- |
| 52 | SLTB/TS/GEN/69/2014 | இ.போ.ச விற்கு தகுந்த தீர்த்தல் முகவர் (clearing agent) நிலையமொன்றை தெரிவு | பூர்த்தியாக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | செய்வதற்கான கூறுவிலை | |
| 53 | SLTB/TS/GEN/70/2014 | 50 “சிங்கிள் கப்” வண்டிகளைக் கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை | தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது |
| 54 | SLTB/TS/GEN/ආරක්ෂක .නී/2014 | இ.போ.ச தலைமை அலுவலக பாதுகாப்புக் காவலர்கட்கு சீருடைகள் (துணிகள் வழங்கி) தைப்பதற்கான கூறு விலை கோரல் | பூர்த்தியாக்கப்பட்டது |
| 55 | SLTB/TS/GEN/05 III/2014 | இ.போ.ச விற்கு ஆளடையாள அட்டை அச்சிடுவதற்கான பொருட்களை வழங்குவதற்கான கூறுவிலை | பூர்த்தியாக்கப்பட்டது |
| 56 | ශ්‍රීලංගම/ටෙ.මා/රියදුරු.නී. ඇ/2014 | இ.போ.ச தலைமையலுவலகத்திலுள்ள அலுவலக வாகன சாரதிகட்கு 2015 ஆம் ஆண்டுக்கான சீருடைகட்கான துணிக்கும் தைப்பதற்கும் கூறுவிலை கோரல் | பூர்த்தியாக்கப்பட்டது |
| 57 | SLTB/TS/GEN/7/VIII/2014 | புதிய உல்லாச பஸ்கள் பழுதுபார்ப்பதற்காக புதிதாக நிருமாணிக்கப்படவிருக்கும் கராச்சில் உபயோகத்திற்குத் தேவையான புதிய உபகரணங்களைப் பெற்றுக் | உல்லாச பஸ்கள் கொள்வனவும், கொடுப்பனவும் போக்குவரத்து அலகால் செய்யப்படும் |

| | | | |
|---|---|---|---|
| | | கொள்வதற்கு கூறு விலை கோரல் | |
| 58 | SLTB/TS/GEN/67/II/2014 | 15-20 ஆசனங்களுடைய 5 சிறிய பஸ்கள் கொள்வனவு செய்தல் (2வது தடவை) | கொள்வனவு செய்யப்படவில்லை |
| 59 | SLTB/TS/CB/33/2014 | இ.போ.ச கதிர்காம சுற்றுலா வங்களாவிற்குத் தேவையான வீட்டுப் பொருட்கள் கொள்வனவிற்கான கூறுவிலை கோரல் | பூர்த்தியாக்கப்பட்டது |
| 60 | SLTB/TS/GEN/65/2014 | புதிய யூடொங் பஸ்கட்குத் தேவையான தயர்க் கூறுகள் | தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது |
| 61 | SLTB/TS/PS/01/2014 | இ.போ.ச பாதுகாப்பு சேவைக்கு கூறுவிலை கோரல் | பூர்த்தியாக்கப்பட்டது |
| 62 | SLTB/TS/GEN/68/2014 | இ.போ.ச பஸ்கட்கு உள்ளே LED திறையூடாக விளம்பரங்கள் வெளிக்காட்டுவதற்கு தகுதியான விளம்பர முகவர் நிலையத்தைக் தெரிவு செய்வதற்கு கூறுவிலை கோரல் | நிறுவகங்கள் கூறுவிலை சமர்ப்பிக்கவில்லை |
| 63 | SLTB/TS/SUI/01/2014 | இ.போ.ச அங்குலான சாரதிப் பயிற்சிப் பாடசலை, குருணாகலை தெற்கு, பாணந்துறை, கட்டுபெத்த, அழுத்கம, மட்டக்களப்பு, வாழைச்சேனை சாலைகளில் | பூர்த்தியாக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | இருந்து பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கழிக்கப்பட்ட மாற்றுறுப்புக்கள் விற்பனைக்கான கேள்விப் பத்திரம் | |
| 64 | ශ්‍රීලංගම/ටෙම/පැරණි කඩදාසි/2014/01 | இ.போ.ச தலைமையலுவலகத்தில் திரண்டுள்ள பழைய புதினத்தாள்கள் விற்பனை | பூர்த்தியாக்கப்பட்டது |
| 65 | SLTB/TS/SUI/02/2014 | இ.போ.ச அங்குலானை சாரதிப் பயிற்சிப் பாடசாலை, தெறணியகலை, றம்புக்கனை, குருணாகலை தெற்கு, பாணந்துறை ஆகிய சாலைகளிலும், மதவாச்சி, பெற்றி கலவத்தை பிராந்திய வேலைக்களங்களிலும் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கழிக்கப்பட்ட பாவனையிலிருந்து அகற்றப்பட்ட மாற்றுறுப்புகள் விற்பனைக்கான கேள்விப் பத்திரம் | பூர்த்தியாக்கப்பட்டது |
| 66 | SLTB/TS/GEN/2014/12/III | அம்பாறையிலுள்ள இ.போ.ச டயர் தொழிற்சாலையிலுள்ள “பவின்” தூளை விற்பனை செய்வதற்கான கூறுவிலை கோரல் | பூர்த்தியாக்கப்பட்டது |
| 67 | SLTB/TS/සාමාන්‍ය/සුභ සාධක | பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கணனியுடன் தொடர்புடைய துணைக் கருவிகள் விற்பனைக்கான கேள்விப்பத்திரம். | பூர்த்தியாக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 68 | ශ්‍රීලංගම/ටෙම/සැරණි පුවත්පත්/2014/I | இ.போ.ச தலைமையலுவலகத்தில் திரண்டுள்ள பழைய புதினத்தாள்கள் விற்பனை | பூர்த்தியாக்கப்பட்டது |
| 69 | SLTB/TS/GEN/2014/12 IV | அம்பாறையிலுள்ள இ.போ.ச டயர் தொழிற்சாலையிலுள்ள “பவின்” தூளை விற்பனை செய்வதற்கான கூறுவிலை கோரல் | பூர்த்தியாக்கப்பட்டது |

**வினியோக/ வாணிப பகுதி**

01. நாடு பூராவுமுள்ள பிராந்திய வேலைக்களங்கள் யாவற்றிற்கும் நடைமுறைக்கேற்ப மாற்றுறுப்புகளையும், துணையுறுப்புகளையும் கொள்வனவு செய்து, அவற்றை கையிருப்பிலிட்டு, வழங்கி கொடுப்பனவிற்கான உறுதிச்சீட்டுக்களை நிதிப் பிரிவிற்கு அனுப்புதல். அத்துடன் நாடு பூராவுமுள்ள சாலைகட்குத் தேவையான மாற்றுறுப்புகளை தொழினுட்ப பகுதியின் விதப்புரையுடன் கொள்வனவு செய்து, மேற்குறித்தவாறு வழங்கி, கொடுப்பனவிற்காக அனுப்புதல்.

02. எல்லா பகுதிகள்/பிரிவுகளிடமிருந்து ஆண்டுதோறும் தேவைப்படும் எழுதுகருவிவகை, ரோனர்ஸ், பென்ட்றைவ், கணனிகள் ஆகியவற்றின் விவரங்களைத் திரட்டி உரிய கேள்விப்பத்திர சபைக்கு சமர்ப்பித்து, கூறுவிலைகள் கோரப்பட்ட பின்னர் விலைகளையும் பட்டோலையையும் மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்ப்பித்து அக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் விலைகளும் வழங்குநர்களும் தெரிவு செய்யப்பட்டு அதற்கேற்ப 2 மாதத் தேவை கட்டளையிடப்பட்டு “பின்” அட்டையில் உரிய பதிவுகளைச் செய்து கொடுப்பனவுகள் செய்து பொருட்களை வினியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

03. சகல அலுவலக உபகரணங்களும் கணனிகள், அத்துடன் தொடர்புடைய துணையுறுப்புகள், அச்சிடும் இயந்திரங்கள்,UPS இயந்திரங்கள், வளிச்சீராக்கிகள்,

கைவிரல் அடையாள இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள் ஆகியனவும் அலுவலகத் தளபாடங்களும் தேவைக்கேற்ப கொள்வனவு செய்யப்பட்டு கேள்விப்பத்திர சபை அனுமதி கிடைத்த பின்னர் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும்.

04. அங்கீகரிக்கப்பட்ட விலைகளையும், வழங்குநர்களின் விவரங்களையும் சகல இ.போ.ச சாலைகட்கும், பிராந்திய வேலைக்களங்கட்கும், பிராந்தியங்கட்கும் அறிவித்தல் வேண்டும். இதனால் அவர்கள் தங்கள் அலுவலக உபகரணத் தேவைகளை தேவைக்கேற்றவாறு கொள்வனவு செய்யக் கூடியதாயிருக்கும்.

05. சகல இ.போ.ச சுற்றுலா வங்களாக்கட்கும், விடுதிகட்கும் தேவையான தளவாடங்கள், சமையலறைப் பாத்திரங்கள், மின்சார உபகரணங்கள் ஆகியவற்றை அனுமதிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகட்கேற்ப கொள்வனவு செய்து, வினியோகித்து, கொடுப்பனவு செய்து பொருட் பதிவேட்டில் பதிவுசெய்தல் வேண்டும்.

06. கேள்விப்பத்திர சபை அனுமதியுடன் இ.போ.ச தலைமையலுவலகத்திற்கும், தலைமையலுவலக நிதி ஒதுக்கீட்டின் கீழ் இயங்குகின்ற வேலையிடங்கட்கும் மின்பிறப்பாக்கிகள், மூலப் பொருட்கள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்தல், வளிச்சீராக்கிகளைப் பராமரித்தல், , துணைக்கருவிகட்கும்/மின்சார துணைக்கருவிகட்கும் பழுதுபார்த்தல்கள் ஆகியனவும், பொருட்கள் வழங்கலும், கொடுப்பனவுகளும்.

07. நாடு பூராவுமுள்ள சகல சாலைகளிலுள்ள இ.போ.ச பஸ்கட்கு தேவையான புதிய தயர்கள், பற்றறிகள் ஆகியவற்றை அவற்றின் தேவைகட்கேற்ப பிராந்திய அலுவலகங்கள் ஊடாக வினியோகித்தல், உரிய பதிவேடுகளை முறையாகப் பேணல், கையிருப்பைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல், கொடுப்பனவுகளைக் கவனித்தல்.

08. இ.போ. சபைக்கு ஆண்டொன்றுக்குத் தேவையான பருவகாலச் சீட்டுக் கையிருப்பை அச்சிட்டு பேணல், அவற்றைத் தேவைக்கேற்ப சாலைகட்கு வினியோகித்தல், உரிய பதிவேடுகளைப் பேணல், கொடுப்பனவிற்குத் தேவையான உறுதிச் சீட்டுகளை (voucher) ஆயத்தஞ் செய்தல்.

09. இ.போ.ச ஊழியர்கட்கும் வெளியாருக்கும் வழங்குவதற்கான பயணச் செல்கைச் சீட்டுகளை அச்சிடுவதற்குத் தேவையான மூலப் பொருட்களைக் கொள்வனவு செய்தல், உரிய பதிவேடுகளைப் பேணல், கொடுப்பனவுகளைக் கவனித்தல்.

10. "யூடொங்" பஸ்கட்குத் தேவையான மாற்றுறுப்புகளையும் துணையுறுப்புகளையும் சீன வினியோகத்தர்களிடமிருந்து கொள்வனவு செய்தல், அத்தகைய பொருட்களை இலங்கை சுங்கப் பகுதியினால் சீர்ப்படுத்துவித்து தேவைக்கேற்றபடி அவற்றை வினியோகித்து கையிருப்புக் கட்டுப்பாட்டைப் பேணி உரிய கொடுப்பனவுகட்குத் தேவையான பதிவேடுகளைத் தயாரித்தல்.

11. இ.போ.ச சபையின் கீழுள்ள சுற்றுலா வங்களாக்களுக்கும் விடுதிகட்கும் தேவையான பொருட்கள் யாவற்றையும் கொள்வனவு செய்து வினியோகித்தலும் உரிய பட்டோலைகளையும் கோப்புகளையும் பேணலும்.

12. நாடு பூராவுமுள்ள சாரதிப் பயிற்சிப் பாடசாலைகட்குத் தேவையான வாகனங்களையம் இதர பொருட்களையும் தேவைக்கேற்றவாறு கொள்வனவு செய்தலும், உரிய கையிருப்பு பட்டோலைகளைப் பேணலும்.

13. உறுதிச்சீட்டுகளை ஆயத்தஞ் செய்தலும் வாகனக் கொள்வனவிற்கு (அலுவலக வாகனங்கள்) உரிய இதர பட்டோலைகளையும் கோப்புகளையும் பேணலும்.

14. அங்கீகரிக்கப்பட்ட கூறுவிலைகள் கேள்விப்பத்திர சபை வசம் இல்லாத வேளைகளில் அவசர தேவைகட்காக கூறுவிலைகள் கோரல், பட்டோலைகளை ஆயத்தஞ் செய்தலும் கேள்விப்பத்திர சபை தழுவல் அனுமதி பெறலும்.

15. சகல கொள்வனவுகளும் விடய ரீதியாகவும் வேலைக்கள வாரியாகவும் உறுப்பு இலக்கங்களின் கீழ் வேறுபடுத்தப்பட்டு, கடமைகள் ஒப்படைக்கப்பட்டு, உரிய கடமைகளை ஊழியர்கள் நிறைவேற்ற வேண்டும்.

16. வினியோக கொள்வனவு விடயங்கள் யாவும் " பின் அட்டையில்" பதியப்பட்டு கிரமமாக கையிருப்பு கட்டுப்பாட்டில் இருத்தல் வேண்டும்.

17. வழங்கு உறுதிச்சீட்டு பதிவேடுகள் (S-1), வழங்கு உறுதிச்சீட்டுகள் (S-II) பெறும் உறுதிச்சீட்டுகள் (S-5 RV) வழங்கு உறுதிச்சீட்டுகள் (5-6) கட்டளைகளை உரிய முறையில் கணனிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

18. கேள்விப் பத்திர மூலம் சகல கொள்வனவுகட்கும் உரிய பதிவு செய்யப்பட்ட கூறுவிலைகள் கோரப்படும் போது குழு அலுவலரில் ஒருவராகப் பங்கேற்க வேண்டும். விலை அனுமதிக்காக கேள்விப்பத்திர சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

19. ஆண்டு கொள்வனவுத் திட்டம் ஆயத்தம் செய்யப்பட்டு கணக்காய்வு முகாமைத்துவக் குழுவினரின தும் பணிப்பாளர் சபையினதும் அனுமதிக்காக அனுப்பி அதன் பின்னர் உரிய முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

20. பிரதான களஞ்சியத்தின் நாளாந்த செயற்பாட்டை கண்காணித்து உரிய அறிவுறுத்து ரகளை வழங்கி, கையிருப்பிட்டு, நடைமுறைகளை அறிமுகப்படுத்தி அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

21. ஒளிப்படப் பிரதி இயந்திரங்கள், கணனிகள், மற்றும் இதர உபகரணங்கள் பழுதடையும் போது அவற்றை பழுதுபார்த்தலுக்கு அனுப்பி பேண வேண்டும்.

22. கேள்விப்பத்திர சபை நடவடிக்கைகள் யாவும் முற்றுப் பெற்ற பின்னர், கடிதங்களைத் தயார் செய்து , மதிப்பீட்டுக்குச் சமர்ப்பித்து மதிப்பீட்டறிக்கைகளைத் தயார் செய்ய வேண்டும்.

23. கழிவு செய்யப்பட்ட பஸ்கள், தயர்கள், பழைய புதினத் தாள்கள் அங்கீகரிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைக்கேற்ப விற்பனை செய்யப்பட்டு உரிய கூறுவிலைகள் நிரலிடப்பட்டு பொருத்தமான பட்டோலை தயாரிக்கப்பட வேண்டும்.

24. இறுதிக் கொடுப்பனவிற்காக கூறுவிலை பட்டியல்கள் யாவும் அனுப்பப்பட வேண்டும். அவற்றை பதிவு செய்ய வேண்டும்.

25. இ.போ.ச சகல சாலைகள், பிராந்திய வேலைக்களங்கள், பிராந்திய அலுவலகங்களிலுள்ள வினியோக அலுவல்கள், பண்டசாலைக் காப்பாளரின் விவரங்கள் பேணப்பட வேண்டும். நியமனங்கட்கான நேர்முகப் பரீட்சைகளில் பங்கேற்று இடமாற்றங்களுக்கு உரிய விதப்புரைகள் வழங்கி கண்காணித்தலும் வேண்டும்.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. சிஎம்ஏ/எஸ்எல்ரிபி/எப்/01/2014/24  ඔබේ අංකය / உமது இல. / Your No.  දිනය / திகதி / Date 2017 திசெம்பர் 28 திகதி

19 APR 2018

தலைவர்,
இலங்கை போக்குவரத்து சபை,

**இலங்கை போக்குவரத்து சபையின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை போக்குவரத்து சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்து சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலாதாரங்கள் பொருண்மையாக பாதிக்கப்படலாம்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இலங்கை போக்குவரத்து சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 நிறுவனத்தின் இடையறாமல் நீடித்தல்

சபை தொடர்ச்சியாக நட்டமடைந்திருந்தமையால் தேறிய சொத்துக்கள் பாரிய அளவில் அரிப்புக்கு ஆளாகியிருந்த காரணத்தினால் மீளாய்வாண்டு இறுதி அளவில் தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 28,147,592,104 இற்கான மறை பெறுமதியொன்றினை அடைந்திருந்ததுடன் அதன் காரணமாக திறைசேரியின் அல்லது அரசின் நிதி உதவிகள் இன்றி நிறுவனத்தை இடையறாது நடாத்துவதற்கு இயலாத நிலைமையொன்று ஏற்பட்டு இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி நிலைமையை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரையான காலப்பகுதியில் நடைமுறைப் பொறுப்புக்களை மேவகை செய்வதற்காக காணப்படும் நடைமுறைச் சொத்துக்களின் தொகை மொத்த நடைமுறைப் பொறுப்புக்களில் 34 சதவீதமான மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் 2010 ஆண்டின் போது இம்மட்டம் 42 சதவீதமாக இருந்தது. செலுத்த வேண்டிய பணத்தை உரிய முறைப்படி செலுத்தாமை, அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்காமை மற்றும் நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் முன் கொண்டுவந்து காணப்படும் மீதிகள் இந்த நிலைமை ஏற்படுவதற்கு முக்கியமான காரணமாக இருந்துள்ளது.

### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 7

காசுப்பாய்ச்சல் கூற்றின் நிதிச் செயற்பாடுகள் என காட்டப்பட வேண்டிய ரூபா 741,501,613 தொகைக்கான அரசாங்க மானியம் பெறுவனவுகள் மூதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் பயன்படுத்தக் கூடிய நிலைமைக்கு ஆக்கிய சந்தர்ப்பம் முதல் ஆக்கபூர்வமான வாழ்க்கை காலம் பூராகவும் முறைப் பிரகார அடிப்படையில் பெறுமானத் தேய்வு கழிக்க வேண்டிய போதிலும் சபை, சொத்துகளை கொள்வனவு செய்த ஆண்டிற்காக பெறுமானத் தேய்வு கழிக்காமை மற்றும் அகற்றும் ஆண்டிற்காக மொத்தமாக பெறுமானத் தேய்வு கழிக்கும் கொள்கையொன்று கடைபிடித்திருந்தமையால் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்து பயன்படுத்தியிருந்த ரூபா 1,402,746,999 இற்கான ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்காக பெறுமானத் தேய்வு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 2005 ஆண்டின் பின்னர் கொள்வனவு செய்திருந்த போதிலும் முற்றாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்த 2,235 பஸ் வண்டிகள் மற்றும் அதற்கு முன்னர் கொள்வனவு செய்து தொடர்ந்தும் ஓட்ட நிலையில் காணப்பட்ட பஸ் வண்டிகளை மீண்டும் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதிகளை வெவ்வேறாக இனங் கண்டிருக்காததுடன் நியமத்திற்கு முரணாக காணிகள் மற்றும் கட்டிடங்களின் மொத்தப் பெறுமதியாகிய ரூபா 319,799,319 தொகையை 50 சதவீதமாகிய ரூபா 159,899,660 தொகை

கட்டிடங்கள் எனக் கணித்து அவற்றிற்கு 2.5 சதவீதப் பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 17

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) குத்தகை சொத்துக்களில் நியாயமான பெறுமதி அல்லது செலுத்த வேண்டிய குத்தகை தவணைகளின் தற்போதைய பெறுமதி ஆகிய இரண்டிலும் குறைந்த பெறுமதியினை நிதிக்கூற்றுகளில் காட்டபட வேண்டுமெனினும், சபையினால் குத்தகை பொறுப்பினை கிரயத்தின் மீதும், வட்டித்தொகையை தவணை பண அலகுகளை கூட்டிய முறை (Sum of digit method) மீதும் கணித்து ரூபா 10,064,442,013 தொகை குத்தகை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன.

(ii) குத்தகைகள் தொடர்பாக பின்வரும் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- காலப்பகுதியின் முடிவில் குறைந்த குத்தகைத் தவணை மற்றும் அதனது தற்போதைய பெறுமதியினை இணக்கஞ் செய்தல்
- ஒரு வருடத்திற்கு குறையாத காலத்திற்கு ஒரு வருடத்தை விட கூடிய, 05 வருடங்களை விட குறைந்த, 05 வருடங்களை விட கூடிய காலப்பகுதி தொடர்பாக வகைப்படுத்தி கணக்குக் காலப்பகுதிகள் முடிவில் உள்ளவாறு எதிர்கால குத்தகை தவணைகளின் கூட்டுத்தொகை மற்றும் அவற்றின் தற்போதைய பெறுமதியின் கூட்டுத்தொகை

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19

நியமத்தின் பிரகாரம் பின்னைய ஊழிய நலன்களின் பொறுப்புக்களை அளவை செய்தல் தொடர்பாக நிறுவனத்தினால் எதிர்வு கூறிய அலகு செலவு முறையினைப் பயன்படுத்தியிருக்கவில்லை.

## 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 9,923,554,194 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அதனை ரூபா 9,921,453,594 தொகை என காட்டப்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 2,100,600 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதனச் சீராக்கல்களில் ஏனைய செலுத்த வேண்டிய கணக்குகளின் கீழ் ரூபா 11,193,911,852 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும், பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 11,195,752,191 தொகையாகக் காணப்படாமையால் ரூபா 1,840,339 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) சபையின் வங்கிக் கணக்கொன்றில் 2012 ஆண்டு முதல் 2014 ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரை வங்கியினால் அறவிடப்படவேண்டிய கூட்டுத்தொகை ரூபா 184,262 தொகையான வங்கிக் கட்டணம் மற்றும் காசோலை புத்தக கட்டணம் தொடர்பாக குறிப்பிட்ட காசேட்டில் மற்றும் செலவுக் கணக்குகளில் கணக்கீடு செய்திருக்காமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காட்டியிருந்த திரண்ட இலாபம் அப் பெறுமதியினால் மிகையாகக் காட்டியிருந்தது.

(ஈ) தலைமை அலுவலகத்தில் மற்றும் 9 பிராந்திய அலுவலகங்களில் தொக்குக் கணிப்பீடு அறிக்கைகளில் பிரகாரம் தொக்குகளின் பெறுமதி பேரேட்டின் தொக்கு பெறுமதியை விட ரூபா 80,122,221 இனால் மிகையாக இருந்ததுடன் அதற்கான காரணத்தை கண்டறியாமல் செயற்பாட்டு இலாபத்திற்கு சீராக்கல் செய்துள்ளமையால் மீளாய்வாண்டிற்கான நட்டம் அப் பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான இறுதிக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்த ரூபா 2,468,853,247 இற்கான வர்த்த கடன் கொடுத்தோரின் மீதியின் கூட்டுத்தொகை ரூபா 37,117,112 தொகையின் 03 வர்த்தக கடன் கொடுத்தோர் வரவு மீதிகளில் இருந்து கழித்து காட்டியிருந்தமையினால் கடன்கொடுத்தோர் மீதி அப் பெறுமதியால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2005 – 2012 காலப்பகுதிக்கான கணக்காய்வாளர் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 3,081,446 தொகை எனினும் சபையின் நிதிக் கூற்றுக்களில் ரூபா 417,526 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 2,663,920 தொகை குறைவாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(எ) கண்டி மற்றும் வட பிராந்தியத்தை சேர்ந்த உடுதும்பர மற்றும் பருத்தித்துறை டிப்போக்களில் இருந்து அறவிடப்படவேண்டிய பொலிஸ் அனுமதிப் பத்திர வருமானம் ரூபா 3,653,998 தொகை அறவிடப்பட வேண்டிய வருமானக் கணக்கிற்கு வரவு வைப்பதற்கு பதிலாக குறிப்பிட்ட பொலிஸ் அனுமதிப்பத்திர வருமானக் கணக்கிற்கு வரவில் மற்றும் செலவில் பிழையான முறையில் கணக்கீடு செய்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான இலாபம் மற்றும் வர்த்தக பெறுகைகள் கணக்கு குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) 02 கம்பனிகளில் இருந்து 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்து களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த ரூபா 13,824,553 தொகைக்கான பஸ் வண்டி உதிரிப்பாகங்களின் பெறுமதிகளின் கூட்டுத்தொகைகளை தீர்த்தல் பதிவுகள் குறிப்பிட்ட முற்பணக் கணக்கில் மற்றும் கடன்கொடுத்தோர் கணக்குகளில் கணக்கீடு செய்யாமையால் முற்பணக் கணக்கின் மற்றும் கடன் கொடுத்தோர் கணக்கின் மீதி அப் பெறுமதியினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) சபையின் வங்கிக் கணக்கு ஒன்று தொடர்பாக வங்கியினால் 1991 திசெம்பர் 12 மற்றும் 1992 செப்தெம்பர் 01 ஆம் திகதிகளில் முறையே வரவு வைத்திருந்த ரூபா 70,449 தொகை மற்றும் ரூபா 2,100 தொகை மற்றும் 2011 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை சபையின் வட பிராந்தியத்தில் 4 வங்கி கணக்குகளுக்கு கிடைத்திருந்த ரூபா 12,665,851 தொகை எக் காரணத்திற்காக கிடைக்கப்பட்டது என இனங்கண்டு கணக்கீடு செய்யாமல் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வங்கி இணக்கக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செயற்படாத கணக்குகள் என கூட்டுத்தொகை ரூபா 9,935,375,095 இற்கான வரவு மீதி மற்றும் ரூபா 26,054,948,782 இற்கான செலவு மீதி தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்காததுடன் இந்த மீதியில் இருந்து மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கீழ்

காட்டப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களின் மூலம் பிழையற்ற நிலைமையொன்று சித்தரித்துக் காட்டப்படவில்லை.

## 2.2.4 விளக்கமளிக்கபடாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்காக மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது சபையினால் உ திரிப்பாகங்கள் கொள்வனவு செய்தல் 08 வங்கிக் கணக்குகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றில் 02 வங்கிக் கணக்குகளின் மூலம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வழங்கியிருந்த முற்பண மீதி ரூபா 284,394,842 தொகை எனினும் அது தொடர்பாக சமர்ப்பித்திருந்த அட்டவணையின் பிரகாரம் அது ரூபா 290,959,007 தொகை ஆகக் காணப்பட்டமையால் ரூபா 6,564,165 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையின் இறுதிக் கணக்குகளில் காட்டியுள்ள 04 பிராந்தியங்களின் கடன் கொடுத்தோர் மீதியில் காணப்பட்ட ரூபா 760,116,593 தொகைக்காக சமர்பிக்கப்பட்டிருந்த கடன் கொடுத்தோர் அட்டவணையின் பெறுமதி ரூபா 652,868,944 தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 107,247,649 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) கணக்கு பகுதியின் தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது வழங்கியிருந்த பிரயாண அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 8,418 தொகை எனினும் போக்குவரத்து பிரிவில் இருந்து கணக்காய்விற்கு சமர்பித்திருந்த பிரயாண அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 5,748 தொகையாக காணப்பட்டமையால் பிரயாண அனுமதிப்பத்திரங்கள் 3,270 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ஈ) சப்பிரகமுவ மற்றும் கழுத்துறை ஆகிய 02 பிராந்திய அலுவலகங்களின் கடன் கொடுத்தோருக்கு வழங்கியிருந்த காசோலைகளை இரத்துச் செய்யும் போது அந்த கடன் கொடுத்தோர் மீதிகளில் செலவு மீதிகள் ஏற்பட வேண்டுமெனினும், அந்தக் கணக்குகளில் முறையே ரூபா 727,000 மற்றும் ரூபா 312,460 இற்கான வரவு மீதிகள் ஏற்பட்டிருந்ததுடன் அதற்கான காரணம் அல்லது விளக்கமளித்தல்கள் கணக்காய்விற்குச் சமர்பிக்கவில்லை.

### 2.2.5 தொங்கல் கணக்குகள்

10 வருடங்களை விட மிகையான காலம் முதல் மீதிகள் வித்தியாசப்பட்டு முன் கொண்டு வரப்பட்டிருந்த தொங்கல் கணக்கு ஒன்றின் முன்னைய ஆண்டின் போது காணப்பட்ட ரூபா 17,664,474 இற்கான வரவு மீதி மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 129,933,148 இற்கான வரவு மீதி ஒன்று வரை அதிகரித்திருந்தது. சபையின் வடக்கு மற்றும் ஊவா மாகாணங்களின் 9 டிப்போக்களின் கொள்வனவு தொடர்பாக இருப்புக்களை கணக்கீடு செய்யும் போது ஏற்பட்டுள்ள வழுக்கல் காரணமாக தொங்கல் கணக்கின் மீதி அதிகரித்திருந்த போதிலும் அவை தொடர்பாக உரிய சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அவற்றின் எதிரே சுட்டிக்காட்டியுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கபடாமையினால் அவற்றை கணக்காய்வின் போது மெய்மையானதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

| | கணக்கு விடயம் | பெறுமதி (ரூபா) | சமர்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | வர்த்தக கடன் கொடுத்தோர் | 1,815,984,303 | விரிவான அட்டவணைகள் மற்றும் காலப்பகுப்பாய்வுகள் |
| (ஆ) | கொள்வனவு செய்தல் முற்பணங்கள் | 795,139,018 | 14 நாட்குறிப்புக்களுக்கான தீர்த்தல் தொடர்பான விபரங்கள் |
| (இ) | நடத்துனர் நிலுவை வருமானம் | 14,414,671 | 11 பிராந்திய அலுவலகங் களுக்கான அட்டவணைகள் |
| (ஈ) | காசாளர் நிலுவை மீதி | 36,251,543 | அட்டவணைகள் |
| (உ) | வர்த்தக கடன்பட்டோர் மீதி | 12,782,295 | அட்டவணைகள் |
| (ஊ) | இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் | 11,988,614 | விரிவான அட்டவணைகள் |

| | | | |
|---|---|---|---|
| (எ) | முற்பணங்கள் | 34,000,000 | முற்பணங்கள் தீர்த்தல் தொடர்பான ஆவணங்கள் |
| (ஏ) | கொள்வனவு முற்பணங்கள் | 3,000,000 | கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் |

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலுவை முற்பணங்கள் தொடர்பாக விரிவான அட்டவணையின் பிரகாரம் 2014 ஆண்டிற்கு முன்னர் வழங்கியிருந்த கொள்வனவு முற்பணங்களில் ரூபா 764,374,902 தொகை எனப்படும் 42 சதவீதமானவை ஒரு வருடத்தை மிகைத்திருந்த போதிலும் அவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2008 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ஊழியர் சேமலாப நிதியாக இலங்கை போக்குவரத்து சபையின் நிதியத்திற்கு இலங்கை மத்திய வங்கிக்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபைக்கு செலுத்த வேண்டிய கூட்டுதொகை ரூபா 5,927,694,884 தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) வர்த்தக கடன் கொடுத்தோர் அட்டவணைகள் சமர்பித்திருந்த 04 பிராந்திய அலுவலங்களின் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 01 வருடம் முதல் 05 வருடங்களுக்கு இடைப்பட்டவைகளின் கூட்டுத்தொகை ரூபா 323,650,997 இற்கான கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்த்திருக்கவில்லை. அத்துடன் 05 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரை மற்றும் 10 வருடங்களை விட மிகையான காலப்பகுதியில் தீர்ப்பாமல் காணப்பட்ட கடன் கொடுத்தோர் மீதிகளின் பெறுமதிகள் முறையே ரூபா 48,969,260 தொகை மற்றும் ரூபா 8,701,925 தொகையாக இருந்தது.

(ஈ) கொழும்பு பிராந்திய அலுவலகத்தை சேர்ந்த அவிசாவலை டிப்போவில் 2011 ஆண்டு முதல் காணப்பட்டு வரும் ரூபா 636.536 இற்காக இரத்து செய்யப்பட்ட காசோலை மீதியொன்று காணப்பட்டதுடன் அதற்கான காரணத்தை கண்டறிந்து தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) குத்தகை வசதிகளின் கீழ் 2014 ஜுலை 01 முதல் 2015 பெப்ரவரி 22 திகதி வரை 112 டிப்போக்களுக்கு வழங்கியிருந்த 2,200 பஸ் வண்டிகளின் ஒரு நாளைக்கு ரூபா 3,000 மக்கள் வங்கியில் வைப்புச் செய்ய வேண்டுமெனினும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 82,672,002 தொகை அந்த டிப்போக்களில் இருந்து தலைமை அலுவலகத்திற்கு கிடைக்க வேண்டியிருந்தது.

(ஊ) நுவரஎலிய பிராந்திய அலுவலகத்தை சேர்ந்த கம்பளை டிப்போவின் நடத்துனர் நிலுவைத் தொகை மீதி ரூபா 412,968 தொகை காணப்பட்டதுடன் அப் பெறுமதியில் ரூபா 143,936 தொகை ஒரு வருடத்தை விட மிகையான காலம் முதல் நிலுவையாக காணப்பட்ட போதிலும் அம்மீதியை அறவிட்டு செய்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) 2014 மே மாதம் முதல் 2015 நவம்பர் 10 திகதி வரை 47 விபத்துக்கள் தொடர்பாக ரூபா 6,470,187 இற்கான தொகையொன்று காப்புறுதி நட்டஈடு கோரப்பட்டிருந்த போதிலும் ஒரு பஸ் வண்டிக்காக கோரப்பட்டிருந்த ரூபா 2,000,000 தொகை தொடர்பாக மாத்திரம் ரூபா 197,500 தொகை கிடைத்திருந்ததுடன் மீதி தொகை 2016 ஜுலை 26 திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள்விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 ஜுன் 02 திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் 8.2.2 ஆம் பந்தி | நிதிகூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள நிலையான வைப்புக்கள், திறைசேரி உண்டியங்கள் மற்றும் ஏனைய வைப்புக்களில் முறையே ரூபா 421,948,344 தொகை ரூபா 7,749,998 மற்றும் ரூபா 42,323 தொகை என்பன முதலீடு செய்திருந்த போதிலும் அதற்காக நிதி அமைச்சரின் இணக்கம் மற்றும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

| | | |
|---|---|---|
| i. | நிதிப்பிரமாணம் 395(ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்கான சபையினால் பேணப்படும் 241 வங்கிக் கணக்குகளில் 165 வங்கி நடைமுறைக் கணக்குகள் தொடர்பாக வங்கி இணக்கக்கூற்றுகள் கணக்காய்விற்காக சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. | நிதிப்பிரமாணம் 396(ஈ) | 11 வங்கிக் கணக்குகள் தொடர்பாக வழங்கப்பட்ட ஆனால் வங்கிக்கு சமர்பிக்கப்பட்டிருக்காத கூட்டுத்தொகை ரூபா 9,179,895 தொகைக்கான 67 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்ளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| iii. | நிதிப்பிரமாணம் 395(உ) | 05 வங்கிக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 20,927,743 தொகைக்காக வழங்கப்பட்ட ஆனால் சமர்பிக்கப்படாத காசோலைகளின் விபரங்கள் மற்றும் 02 வங்கிக் கணக்குகளில் கூட்டுத்தொகை ரூபா 1,125,000 தொகை வைப்புச் செய்யப்பட்ட ஆனால் தேறப்படாத காசோலைகள் தொடர்பான விபரங்கள் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| iv. | நிதிப்பிரமாணம் 395(எ) | உத்தியோகத்தர்களுக்கு கடமைகள் சாட்டுதல் செய்யும் போது காசேட்டுடன் தொடர்பாக உத்தியோகத்தர் ஒருவருக்கு வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கும் விடயம் சாட்டப்பட வேண்டுமெனினும் சபையின் அனைத்து வங்கி கணக்குகளின் வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கும் கருமம் காசேடு பேணப்படும் உத்தியோகத்தர்களுக்கே சாட்டப்பட்டிருந்தது. |
| v. | நிதிப்பிரமாணம் 446(2) | 2 வங்கி நடைமுறைக் கணக்குகளில் பேணப்பட்டிருந்த 2 காசேடுகள் தொடர்பான |

கூட்டுத்தொகை ரூபா 84,508,230 இற்கான கொடுப்பனவு உறுதி சான்றுகளில் இலக்கங்கள் போடப்பட்டிருக்காததுடன் காசேடு பொறுப்பு செல்ல வேண்டிய பதவி நிலை உத்தியோகத்தரின் மேற்பார்வை கீழ் நடைபெற்றிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| vi. | நிதிப்பிரமாண 757 மற்றும் 2016 மார்ச் 31 திகதி 5/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்காக சபையினால் பண்ட கணிப்பீடு ஒன்று நடாத்தி குறிப்பிட்ட அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிப்பதற்காக நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 1,228,021,529 இற்கான பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன் அதற்கு நேர்ஒப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,974,484,387 தொகை ஆக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 746,462,858 இனால் குறைவடைந்திருந்தது. சபையின் செயற்பாட்டு செலவுகள் ரூபா 1,977,695,268 இனால் அதிகரித்திருந்த போதிலும் வீதிப் பயணிகள் போக்குவரத்து வருமானம் மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 2,804,917,880 இனால் அதிகரித்தல் மேற்கூறிய வீழ்ச்சி குறைவடைதலுக்கு முக்கிய காரணமாக இருந்துள்ளது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 04 வருடங்களில் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2010 ஆண்டு முதல் 2012 ஆண்டு வரை சபையின் பற்றாக்குறை படிப்படியாக அதிகரித்திருந்ததுடன் 2013 மற்றும் 2014 ஆண்டுகளின் போது பற்றாக்குறை படிப்படியாக குறைந்திருந்தது. ஊழியர்களின் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வினை கவனத்தில் எடுத்த பின்னர் சபையின் பங்களிப்பு 2010 ஆண்டிற்கு ஒப்பாக 2011 ஆண்டின் போது அதிகரித்திருந்ததுடன் 2012 ஆண்டின் போது ரூபா 11,499,778,412 தொகையான பங்களிப்பு 2014 ஆண்டின் போது ரூபா 14,711,117,533 தொகை வரை இடையறாமல் வளர்ச்சியடைந்திருந்தது.

## 3.2 சபைக்கு எதிராக அல்லது சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட சம்பவங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 10 பிராந்தியங்கள் தொடர்பாக 31 வெளித்தரப்பினரால் நிறுவனத்திற்கு எதிராக ரூபா 87,372,874 இற்கான நட்டஈடு ஒன்று கோரி 31 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

(ஆ) நிறுவனத்தின் 10 ஊழியர்களினால் நிறுவனத்திற்கு எதிராக 10 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 08 வழக்குகள் ஊழியர்களுக்கு சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

(இ) சபையினால் 07 வெளித்தரப்பினருக்கு ரூபா 9,313,980 தொகை நட்டஈடு கோரி 07 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

2005 இன் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்து சபை சட்டத்தின் பிரகாரம் சபையின் குறிக்கோள்கள் பின்வருவனவாகும்.

- தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் உரிய மாகாண போக்குவரத்து அதிகாரசபையை வினவி பொருளாதார உறுதிப்பாட்டினை ஏற்படுத்தி வினைதிறனுள்ள மற்றும் ஆக்கபூர்வமான முறைசார் பஸ் சேவை ஒன்றினை வழங்குதல், அக் குறிக்கோளினை நிறைவேற்றுவதற்காக சபையின் பிரேரணைகளை உற்படுத்தி மற்றும் செயற்படுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டிய முறையினை இனங்கண்டு திட்டத்திற்கான வருடாந்த பாதீடு ஒன்றினை தயாரித்தல்.

- சபையின் செயற்பாட்டு விடயங்களில் பலமுள்ள உச்சமட்டத்தில் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக அந்த செயற்பாட்டு விடயங்களை நடாத்தப்பட வேண்டிய முறைப்படி சபையின் விடயங்களை நடாத்திச் செல்லல்.

- பொதுப் போக்குவரத்து சேவையின் தரம்சார் தன்மையின் அபிவிருத்தி செய்யும் விதத்தில் போக்குவரத்து துறையில் வேறு திட்டங்கள் அல்லது சேவைகளை செயற்படுத்துதல்.

2014 ஆண்டின் போது சபையின் குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் தயாரித்திருந்த செயல் நடவடிக்கைத்திட்டம், முன்னேற்ற அறிக்கை மற்றும் பாதீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயலாற்றுகை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2005 இன் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்துச் சபை சட்டத்தின் பிரகாரம் சபைக்குரிய அதிகாரத்தின் பிரகாரம் செயற்படுத்தக் கூடிய பின்வரும் விடயங்கள் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கும் போது கவனம் செலுத்தியிருக்கவில்லை.

- வீதிய பயணிகளுக்காக பஸ் தரிப்பிடங்களும் மறைப்புக்களும் வழங்குதல்
- நடைமுறைச் சாத்தியமற்ற மற்றும் கடினமானவை என சபையினால் கவனம் செலுத்திய பாதைகளில் போதியளவு பஸ் சேவைகள் வழங்குவதற்கு முயற்சி செய்தல்.
- சபைக்கு சொந்தமான பஸ் தரிப்பிடங்களை வழங்குதல் மற்றும் பேணல்.

(ஆ) மீளாய்வாண்டின் போது நாளாந்த நேரசூசி தேவைகளின் பிரகாரம் 7204 பஸ் வண்டிகள் ஓடுதல் தேவைப்படாகும். 2014 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நாளாந்தம் 5500 பஸ் வண்டிகள் ஓட்டுவிப்பது இலக்காக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ஒரு நாளில் ஓடிய பஸ் வண்டிகளின் எண்ணிக்கை 4596 ஆக இருந்தது. அதன் பிரகாரம் சபையின் நாளாந்தம் ஓட்டுவதற்கு தேவைப்படும் பஸ் வண்டிகளின் எண்ணிக்கையில் 36 சதவீதம் ஓட்டுவதற்கு முடியாதிருந்ததுடன் 2014 செயல் நடவடிக்கை திட்டத்தின் இலக்கு தொகையில் இருந்து 16 சதவீத தொகை ஓடுவதற்கு முடியாது இருந்துள்ளது.

திட்டமிடல் மற்றும் ஆய்வுப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு இனால் வழங்கியிருந்த தகவல்களின் பிரகாரம் கடந்த 03 வருடங்களின் சபையின் பஸ் வண்டி ஓட்டத்தின் முன்னேற்றத்தின் பிரகாரம் சபையின் நேரசூசி தேவையின் ஓடிய பஸ் வண்டிகளின் எண்ணிக்கை 2011 ஆண்டின் போது 60 சதவீதமாக காணப்பட்ட போதிலும் அவை 2013 ஆண்டளவில் படிப்படியாக 67 சதவீதம் வரை வளர்ச்சியடைந்து மீண்டும் 2014 ஆண்டின் போது 64 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. அதே போல் சபையினால் வருடாந்தம் ஓடுவதற்கு திட்டமிட்டிருந்த கிலோமீற்றர் எண்ணிக்கை 2011

ஆண்டின் போது 56 சதவீதமாக ஓட்டப்பட்டிருந்ததுடன் 2014 ஆண்டளவில் அவை 60 சதவீதம் வரை வளர்ச்சியடைந்திருந்த போதிலும் எதிர்பார்த்த கிலோமீற்றர் எண்ணிக்கை மேலும் 40 சதவீதம் ஓட்டுவதற்கு முடியாதிருந்ததுள்ளது.

(இ) ஓட்ட நிலையில் காணப்பட்ட பஸ் வண்டிகளை பயன்படுத்தி மீளாய்வாண்டின் போது 616,849,447 தொகை கிலோமீற்றர்கள் ஓடுவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் சாரதிகள் நடத்துனர்கள் வெற்றிடங்கள் மற்றும் தொழில்நுட்ப காரணங்களினால் 371,236,274 கிலோமீற்றர் மாத்திரமே ஓட்டப்பட்டிருந்தது. அதாவது எதிர்பார்த்த இலக்கு தொகையில் 60 சதவீதம் மாத்திரம் நிறைவேற்றக் கூட்டியதாக இருந்துள்ளது.

(ஈ) 2014 திசெம்பர் மாதத்தில் பஸ் வண்டித் தொகுதிகளின் நிலைமை அறிக்கையின் பிரகாரம் சபைக்கு சொந்தமான மொத்த பஸ் வண்டித் தொகுதி 7,669 இல் ஓடக்கூடிய நிலையில் இல்லாதவை 1,770 ஆகும். அதேபோல் இந்த பஸ் வண்டிகள் 1,770 இல் 738 பஸ் வண்டிகள் 15 வருடங்களை விட பழமை வாய்ந்த பஸ் வண்டிகள் என அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்கான பதவியணி அறிக்கையின் பிரகாரம் சாரதிகளின் எண்ணிக்கை 10,221 மற்றும் நடத்துனர் எண்ணிக்கை 10,272 ஆக காணப்பட்டதுடன் மொத்த பஸ் வண்டித் தொகுதியினை இடையறாமல் ஓடுவதற்கான சாரதிகள் மற்றும் நடத்துனர்களை முறையான முகாமைத்துவத்துடன் ஈடுபடுத்தியிருக்கவில்லை. சபையின் இந்த நிலைமை வருமானம் குறைவடைதலுக்கு போலவே செயற்திறனுள்ள மற்றும் முறையான பஸ் சேவையொன்றினை வழங்குவதற்கு தடையாக இருந்துள்ளது.

(உ) மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நாளாந்த பாதைப் பதிவேட்டு வருமானம் என ரூபா 83 மில்லியன் தொகையினை பெற்றுக் கொள்ளல் இலக்காக இருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான நாளாந்த பாதை பதிவேட்டு வருமானம் ரூபா 60 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் 28 சதவீதத்தினால் எதிர்பார்த்த இலக்குகளை நெருங்குவதற்கு முடியாதிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பிராந்தியங்களின் பஸ் வண்டி தொகுதியின் நிலைமை அறிக்கை 12 பிராந்தியங்களில் 07 பிராந்தியங்களுக்கு ஓட்டுவதற்காக வழங்கப்பட்டிருந்த இலக்குகளை நெருங்குவதற்கு முடியாதிருந்தது. பஸ் வண்டிகளுக்கு தேவையான பராமரிப்பு, துணைக்கருவிகள் மற்றும் உதிரிப் பாகங்கள் காணப்படாமையும், கணிசமான எண்ணிக்கையான பஸ் வண்டிகள் நாளாந்தம்

திருத்தப்படுவதற்காக காணப்படுவது போலவே பொருளாதார நலன்கள் காணப்படாமையின் காரணத்தினால் பஸ் வண்டிகள் பழுது பார்க்கப்படாமை ஆகிய காரணங்களினால் கணிசமான எண்ணிக்கையால் பஸ் வண்டிகள் ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்படல் இந்த இலக்குகளை நெருங்குவதற்கு இயலாமைக்கு காரணமாகியிருந்துள்ளது.

(எ) மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் 2014 ஆண்டின் போது எதிர்பார்த்த பாதைப் பதிவேட்டு வருமானம் ஒரு கிலோமீட்டருக்கு ரூபா 65.21 தொகை என எதிர்பார்த்த போதிலும் தா-51 அறிக்கையின் பிரகாரம் 2014 ஆண்டின் போது கிலோமீற்றருக்கான வருமானம் ரூபா 59.69 தொகை ஆக இருந்தது. இதன் பிரகாரம் கிலோமீற்றருக்கான ரூபா 5.52 இற்கான வருமான இலக்கொன்றினை நெருங்க முடியாதிருந்தது.

(ஏ) பயிற்சிகள் ஆய்வுகள் மற்றும் அபிவிருத்திப் பகுதியின் 2014 ஆண்டிற்கான அறிக்கையின் பிரகாரம் வருடாந்த பயிற்சி வழங்கிய இலக்குகள் மற்றும் உள்ளவாறான பெறுமதிகளிடையே வித்தியாசங்கள் காணப்பட்டதுடன் அதன் பிரகாரம் எதிர்பார்த்த இலக்கினை அடைய முடியாமையால் 18 சதவீதம் முதல் 60 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஐ) சபையினால் 19 சாரதிகள் பயிற்சி பாடசாலைகள் நடாத்தப்படுகின்றதுடன் அவற்றில் 03 சாரதிகள் பயிற்சி பாடசாலைகள் தலைமை அலுவலகத்தின் கீழ் செயற்படுகின்றன. மீளாய்வாண்டின் போது சாரதிகள் பயிற்சி பாடசாலைகளின் மூலம் ரூபா 32,281,275 இற்கான வருமானமொன்றினை உழைத்திருந்ததுடன் மொத்தச் செலவு ரூபா 37,841,849 தொகை ஆகக் காணப்பட்டமையால் ரூபா 5,560,574 இற்கான தேறிய நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக இந்த நட்டம் சுமார் 63 சதவீதம் அளவில் குறைந்திருந்ததுடன் சாரதிகள் பயிற்சி பாடசாலைகளில் பயிற்றப்பட்ட ஆலோசகர்களின் பற்றாக்குறை ஒன்று போலவே பயிற்சிக்காக பயன்படுத்தப்பட்டுள்ள வாகனங்களின் பற்றாக்குறை இந்த நட்டத்திற்கு முக்கியமான காரணமாக இருந்தது.

(ஒ) 2014 ஆண்டின் போது பொது நலவாய நாடுகளின் மாநாடு இலங்கையில் நடைபெற்றதுடன் அதற்காக இறக்குமதி செய்திருந்த டோன் வகையைச் சேர்ந்த 68 அதி சொகுசு பஸ் வண்டிகள் இலங்கை போக்குவரத்து சபைக்கு கிடைத்திருந்ததுடன் அந்த பஸ் வண்டிகளை செயற்படுத்துவதற்காக மொரட்டுவ டிப்போவை தொடர்பு படுத்தி தனியான அலகு ஒன்று நிறுவப்பட்டு அவ்வலகுக்காக 20 பஸ் வண்டிகள் வழங்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 20 அதி சொகுசு பஸ் வண்டிகளை வீதிப்பயணிகளின் போக்குவரத்திற்காக ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு 32 சாரதிகளும் 32 நடத்துனர்களும் தேவைபட்ட போதிலும் 16 சாரதிகள் 12 நடத்துனர்கள் மாத்திரம் அந்த அலகுக்கு இணைக்கப்பட்டமையால் 16 சாரதிகள் மற்றும் 20 நடத்துனர்களின் பற்றாக்குறை ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ii) 2014 ஆண்டின் போது விபத்திற்கு உள்ளாகியிருந்த 02 பஸ் வண்டிகளைப் பழுதுபார்ப்பதற்கு மற்றும் அதற்கான காப்புறுதி நட்டஈடு பெற்றுக்கொள்ளல் 2017 திசெம்பர் 26 திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) சபையின் முக்கிய குறிக்கோள் பொது போக்குவரத்து சேவைக்காக பஸ் வண்டிகள் ஈடுபடுத்துவதன் மூலம் செயற்திறனுள்ள போக்குவரத்து சேவை ஒன்றினை நடாத்துதல் எனினும் அந்த குறிக்கோளுக்கு முரணான கட்டணம் அறவிடப்படாமல் 2014 ஜனவரி 31 திகதி மத்துகம நகரில் நடைபெற்றிருந்த விழா ஒன்றிற்காக களுத்துறைப் பிராந்திய அலுவலகத்தை சேர்ந்த 06 டிப்போக்களில் இருந்து 47 பஸ் வண்டிகள் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

## 4.2 நிதியப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் அலுவல்களை இலகுபடுத்தும் குறிக்கோளுடன் ஒவ்வொரு குறிக்கோள்களுக்காகவும் சபையினால் தலைமை அலுவலகத்தில் மாத்திரம் 23 நடைமுறைக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் 9 வங்கிக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 2,612,745,132 தொகை ஏனைய 13 நடைமுறை கணக்குகளுக்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் அப்பணத்தை மீண்டும் குறிப்பிட்ட வங்கிக் கணக்கிற்கு பெற்றிருக்கவில்லை. அதன் பிரகாரம் எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்படாமல் சபையின் நிதி விடயங்கள் தொடர்ந்து சிக்கலானதுடன் நிதிக் கட்டுபாட்டு விடயங்கள் மேலும் பலவீனமடைந்து கணக்கீட்டு செயற்பாடுகள் சிக்கலாகியது மாத்திரம் ஏற்பட்டுள்ளது.

(ஆ) வங்கி மேலதிகபற்றில் கட்டுபாடு ஒன்றினை மேற்கொள்வதற்காக 2012 செப்டம்பர் 04 ஆம் திகதி தலைமை அலுவலகத்தில் தனியாக நடைமுறைக் கணக்கு ஒன்று ஆரம்பித்து அனைத்து வங்கி மேலதிகபற்று மீதிகளையும் இந்த கணக்கிற்கு எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2014 திசெம்பர் 31

திகதி வரை தலைமை அலுவலகத்தின், பிராந்திய அலுவலகங்களின் மற்றும் டிப்போக்களின் 147 வங்கிக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 1,369,375,617 இற்கான வங்கி மேலதிக பற்று ஒன்று காணப்பட்டது. அதன் பிரகாரம் இந்த கணக்கு ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் எதிர்பார்த்த குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

## 4.3 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான டிப்போக்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்காக தலைமை அலுவலகத்தினால் கட்டளைகள் அனுப்பியிருந்த போதிலும் வழங்குனர்களினால் பண்டங்கள் நேரடியாக டிப்போக்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும் டிப்போக்களினால் பண்டங்கள் கிடைத்தவுடன் உரிய இன்வொயிஸ்கள் மற்றும் பண்டங்கள் கிடைத்ததற்கான சான்றிதழ்களை தலைமை அலுவலகத்திற்கு சமர்பிகப்படாமையினால் தலைமை அலுவலகத்தின் கொள்வனவு முற்பணக் கணக்கில் 2014 திசெம்பர் 31 திகதியல் உள்ளவாறு ரூபா 1,831,859,235 இற்கான தீர்க்கப்படாத மீதியொன்று காணப்பட்டது. இலங்கை போக்குவரத்து சபையின் முகாமைத்துவத்தினால் போதியளவு உள்ளக சட்டவிதிகள் விதித்திருக்காமையும், போதியளவு மேற்பார்வை ஒன்று மேற்கொள்ளப்படாமையும், அவ்வப்போதே இணக்கங்கள் செய்யப்படாமையும் இதற்கு காரணமாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் கடந்த 4 வருடங்களின் தகவல்களை பரிசோதனை மேற்கொண்ட போது 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 2,095,483 தொகைக்கான காசாளர் நிலுவை மீதி 2011 ஆண்டின் போது ரூபா 1,538,920 வரை சிறிது குறைவடைதல் ஒன்றினை காட்டிய போதிலும் 2012 ஆண்டின் போது அந்த நிலுவை ரூபா 31,853,602 வரை மற்றும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 36,290,966 தொகை வரை படிப்படியாக அதிகரித்து காணப்பட்டது. இந்த நிலையினை சரி செய்வது தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரயாணிகள் டிக்கட் புத்தகங்கள் மூலம் ஏற்படக் கூடிய பிழைகள் மற்றும் மோசடிகளைத் தவிர்ப்பதற்காக தொடர் இலக்கங்களுடன் டிக்கட் புத்தகங்கள் மற்றும் டிக்கட்கள் அச்சிட்டு அதன் மூலம் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையொன்று பேணப்பட வேண்டுமெனினும், சபையினால் 2012 ஆம்

ஆண்டின் போது ரூபா 955,605 தொகை செலவிடப்பட்டு தனியான நிறுவனம் ஒன்றிலிருந்து ஒரு பக்கத்திற்கு 10 டிக்கட் பத்திரங்களைக் கொண்ட 100 பக்கங்களை கொண்ட 19,950 தொகை பிரயாணிகள் டிக்கட் புத்தகங்கள் தொடர் இலக்கம் இன்றி அச்சிடப்பட்டிருந்தது. இந்த பிரயாணிகள் டிக்கட் புத்தகங்களில் 9,750 புத்தகங்கள் பிராந்திய அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் 6,333 புத்தகங்கள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை மேற்கூறிய தவறின் காரணமாக தலைமை அலுவலக களஞ்சியத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்ததுடன் 3,417 புத்தகங்கள் தொடர்ந்தும் தலைமை அலுவலகத்திற்கு திருப்பி ஒப்படைக்கப்படாமல் காணப்பட்டது. இது தொடர்பாக ஏற்பட்டிருந்த நட்டத்தை வழங்குனரிடம் அறவிடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) திருப்பி ஒப்படைக்கப்படாத புத்தகங்களில் 500 புத்தகங்கள் கம்பஹா பிராந்திய அலுவலகத்திற்கு வழங்கியிருந்ததுடன் அவற்றில் 40 புத்தகங்கள் வருமானம் சேகரிப்பதற்காக பஸ் வண்டிகளுக்கு வழங்கப்பட்டு மீதியான 460 புத்தகங்கள் பிராந்திய அலுவலகங்களின் களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தொடர் இலக்கங்கள் இன்றிய டிக்கட் புத்தகங்கள் மூலம் பிரயாணங்களுக்கு வழங்கப்பட்டிருத்தல் பாதை வருமானத்தை மோசடி செய்வதற்கு பயன்படுத்தக்கூடியதான அவ்வாறான டிக்கட் புத்தகங்கள் தொடர்ந்தும் களஞ்சியங்களில் பேணப்படுவதன் மூலம் ஏற்படும் ஆபத்துக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) சபைக்கு சொந்தமான ரூபா 319,799,319 தொகை பெறுமதியான காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக உரிமையினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்காததுடன் சொத்துக்களை மெய்மையாதல் ஒன்று நடாத்தி சொத்துக்கள் பதிவேட்டை இற்றைவரை ஆக்குவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலாக அனுப்பியிருந்த போதிலும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களிலும் கூறியிருந்த போதிலும் 2016 வருட இறுதி வரையும் அதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) இலங்கை போக்குவரத்து சபையின் 12 பிராந்திய அலுவலகங்களின் 119 டிப்போக்களின் வருடாந்த ஒட்டுமொத்த பிரயாணிகள் போக்குவரத்து வருமானம் ரூபா 31,461,130,501 தொகையாக காணப்பட்டதுடன் ஒட்டுமொத்தச் செலவு ரூபா 31,080,779,107 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 379,531,394 இற்கான மொத்த இலாப எல்லை ஒன்றினை காட்டிய போதிலும் 62 டிப்போக்களின் நட்டங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,242,502,068 தொகையாக காணப்பட்டது. நாளாந்த நேரசூசித் தேவைக்கு

ஏற்ப போதியளவு பஸ் வண்டிகள் காணப்படாமை, தொழில்நுட்ப வழுக்கள் மற்றும் சாரதிகள் நடத்துனர்கள் பற்றாக்குறை ஆகிய காரணங்களினால் நாளாந்தம் பாரிய அளவான பாதை வருமானமொன்றினை சபை இழந்துள்ளது.

(எ) செயற்படாத மீதியில் அடங்கியுள்ள ரூபா 3,232,231,164 இற்கான 66 வரவு மீதிகள் மற்றும் ரூபா 2,010,924,185 இற்கான 23 செலவு மீதிகளான அமையாத சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக மொத்தமாக பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டு பணிப்பாளர் சபைக்கு தெளிவுபடுத்தல் மற்றும் அங்கீகாரத்தின் மீது ஏடுகளில் இருந்து பதிவழிக்கப்படுதற்கு 2002 ஜுலை 30 ந்திகதி பொது முயற்சிகள் திணைக்களத்தின் வழங்கியிருந்த அங்கீகாரத்தின் பிரகாரம் 2012 ஆண்டின் போது அச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை ஏடுகளில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மொத்தமாக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்காமையினால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்திருக்காமையால் மீண்டும் 2013 ஆண்டின் போது கணக்குகளுக்கு உட்படுத்தியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை அந்த சீராக்கல்களை சரி செய்திருக்கவில்லை.

## 4.4 செயற்பாட்டு தொழற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகளை மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஊழியர் நலன்புரி விடயங்களுக்காக ஊழியர் நண்டநிதியம் கணக்குகளில் இருந்து ஊழியர்களுக்கு வழங்கியிருந்த கடன் தொகைகளில் அறவீடு செய்திருந்த ரூபா 84,733,235 இற்கான கடன் தவணை பணத்தை அந்த நிதியத்திற்கு செலவு வைக்காமல் சபையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் சேமலாப நிதியில் இருந்து ஊழியர்களுக்கு வழங்கியிருந்த கடனுக்காக ஊழியர் சம்பளத்தில் இருந்து கழித்திருந்த ரூபா 249,486,944 தொகை குறிப்பிட்ட நிதியத்திற்கு வழங்காமல் நிறுவனத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. சபையின் சேமலாபநிதியம் தற்போது இல்லாதாக்கப்பட்டிருந்தமையால் இந்த பணத்தை தீர்க்கும் முறை பற்றிய தகவல்களை கணக்காய்வின் போது சிக்கல் தன்மையில் காணப்பட்டது.

**4.5 தோற்றக்கூடிய ஒழுங்கீனங்கள்**

சபையினால் வில் தகடு வழங்கும் கம்பனி ஒன்றிற்கு 2014 ஆண்டின் போது 66 காசோலைகளின் மூலம் ரூபா 66,500,000 தொகை செலுத்தியிருந்ததுடன் 2012 மற்றும் 2013 ஆண்டுகளின் போது அக் கம்பனிக்கு வில் தகடுகள் கொள்வனவு செய்வதற்காக முறையே ரூபா 30,550,000 தொகை மற்றும் ரூபா 29,100,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த கம்பனிக்கு பணம் செலுத்தும் போது நிதிப் பிரமாணங்கள் 137 மற்றும் 138 இன் பிரகாரம் வில் தகடுகள் கிடைக்கப் பெற்றனவா என உறுதிப்படுத்தி இருக்காததுடன் மீளாய்வாண்டின் போது மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகள் தொடர்பாக பணமும் செலுத்தியிருந்த ரூபா 134,486,075 தொகை பெறுமதியுடைய வில் தகடுகள் இன்னும் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் சேமலாப நிதியத்திற்கு மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய முறையே ரூபா 625,095,955 தொகை மற்றும் ரூபா 5,240,908,747 தொகை மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பங்களிப்பு ரூபா 59,045,730 தொகை உரிய தினத்தில் அனுப்படாமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பாக ரூபா 89,743,024 தொகை மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் தொடர்பாக ரூபா 660,178 இற்கான தொகையொன்று மிகைவிதிப்பாக செலுத்த வேண்டியிருந்தது.

(ஆ) மக்கள் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட வங்கி மேலதிகபற்று வசதிகள் ரூபா 721.62 மில்லியன் தொகை எனினும் 2014 திசெம்பர் 31 திகதி அளவில் மேலதிகபற்று ரூபா 745.22 மில்லியன் தொகை வரை அதிகரித்திருந்தது. வங்கி மேலதிகபற்றுக்காக மாதாந்தம் 17 சதவீதம் வட்டி விகிதத்தின் கீழ் ரூபா 10,320,320 இற்காக மாதாந்த வட்டி செலுத்தப்படுகின்றது. வங்கி மேலதிக பற்றிற்காக வங்கி பாதுகாப்பு பிணையாக 08 சதவீத வட்டி வீதத்தின் கீழ் ரூபா 325,000,000 இற்காக நிலையான வைப்பு ஒன்று மற்றும் பொது சேமிப்புக் கணக்கு ஒன்றில் ரூபா 303,841,753 இற்கான மீதியொன்று பேணப்பட்டிருந்தது. வைப்புக்களுக்காக 2014 ஆண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 39,647,172 தொகை சபைக்கு வட்டி வருமானமாக கிடைத்திருந்த போதிலும் வங்கி

மேலதிக பற்றிற்கான வட்டி மற்றும் வங்கிக் கட்டணம் என சபையினால் ரூபா 84,196,667 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

## 4.7 பெறுகைகள் மற்றும் ஒப்பந்தச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 2.14.1 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 100 மில்லியன் மிகைத்த கொள்வனவுகளுக்காக செயலாளரினால் நியமனம் செய்யப்பட்டிருக்கும் பெறுகைகள் குழு ஒன்றின் மூலம் பெறுகைகள் விடயங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் சபையினால் ரூபா 200,640,792 தொகை பெறுமதியான 4,000 இலத்திரனியல் டிக்கட் மெஷின்கள் கொள்வனவு செய்யும் விடயங்கள் திணைக்கள பெறுகைகள் குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் வண்டிகளுக்காக தீர்வைச் சலுகை அடிப்படையில் 2011 ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை ரூபா 1,415,503,290 இற்காக உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சபையின் வருடாந்த நிதி எல்லையினைக் கவனம் செலுத்தும் போது இந்த உதிரிப் பாக கொள்வனவு செய்யும் பெறுகை நடவடிக்கைகளை மதிப்பாய்வு செய்வதற்காக அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்ட பெறுகைகள் மதிப்பாய்வு குழு ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும் அதற்கு முரணாக 02 மாதங்களுக்கான தேவையை மாத்திரம் கவனம் செலுத்தி இலங்கை போக்குவரத்து சபையின் பெறுகைகள் குழுவின் மூலம் வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் ஒரே வழங்குனரிடம் 2011 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை இந்தக் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) மேலே விவரிக்கப்பட்ட உதிரிப்பாகங்கள் கொள்வனவின் போது ஏற்பட்டிருந்த குறைபாடுகள் காரணமாக இரண்டு பிராந்திய அலுவலகங்களைச் சேர்ந்த 26 டிப்போக்களின் உதிரிப் பாகங்களுக்காக மீண்டும் கூறுவிலை கோரப்படாமல் அடுத்து குறைந்த விலைகூறல் சமர்பித்திருந்த கம்பனியினைத் தெரிவு செய்து வழங்கல் ஒப்பந்த வேலை காட்டப்பட்டிருந்தது.

(iii) மேற்கூறிய உதிரிப்பாகங்களை வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த இரண்டு கம்பனிகளும் குறிப்பிட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் உதிரிப்பாகங்கள் வழங்கியிருக்காத போதிலும் அக்கம்பனிகளுக்கு எதிராக நடவடிக்கைகள் ஏதும் எடுத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் டிப்போக்களில் அவ்வவ் சந்தர்ப்பங்களில் உதிரிப் பாகங்களின் தேவையின் பிரகாரம் உள்நாட்டு பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடம் Fax மூலமாக பெற்றிருந்த கூறுவிலைகளின் அடிப்படையில் வழங்குனர்களை தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் உதிரிப்பாகங்கள் மொத்தமாக கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மொத்தக் கொள்வனவின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய பொருளாதார நலன்களை சபைக்கு பெறுவதற்கு முடியாதிருந்தது.

(இ) இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 42 மற்றும் 54 ஆசனங்கள் கொண்ட 2,200 பஸ் வண்டிகள் இந்தியா அசோக் லேலண்ட் கம்பனியில் இருந்து 72,620,000 அமெரிக்க டொலர்கள் எனப்படும் கிட்டிய ரூபா 10,331,775,516 இற்கான விலையொன்றிற்கு குத்தகை அடிப்படையில் 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த 2,200 பஸ் வண்டிகள் கொள்வனவு செய்யும் போது அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 3.1 ஏற்பாடுகளின் பிரகாரம் சர்வதேச விலைகூறல் கோரப்பட்டிருக்காததுடன் தனிப்பட்ட வழங்குனர் ஒருவரினால் சமர்பிக்கப்பட்டிருந்த விலை கூறலை அடிப்படையாக கொண்டு அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்ட மதிப்பாய்வு குழு ஒன்றினால் மதிப்பாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதேபோல் சபையினால் 2016 மே 16 திகதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த பஸ் வண்டிகள் கொள்வனவு செய்யும் குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் நாணயப்பத்திரம் சமர்பிக்கப்பட்டு 06 மாதங்களில் குறிப்பிட்ட 2,200 பஸ் வண்டிகள் வழங்கப்பட வேண்டியிருந்ததுடன் தாமதம் ஏற்படும் போது உடன்படிக்கையின் நிபந்தனை 26.1 இன் பிரகாரம் 0.01 சதவீதம் தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்தது. எனினும் வழங்குனரினால் இணங்கியிருந்த மொத்த பஸ் வண்டிகளில் 1,900 பஸ் வண்டிகள் மாத்திரம் குறிப்பிட்ட காலத்தில் வழங்கப்பட்டிருந்ததுடன் மீதியான 300 பஸ் வண்டிகள் வழங்குவதில் 3 மாதங்களும் 21 நாட்களும் தாமதித்திருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் அதற்கான தாமதக் கட்டணம் ரூபா 146,800 தொகை அறவிடு செய்திருக்கவில்லை.

### 4.8 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த சபையின் வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈஈ/12 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்திக்கு முரணாக சபையின் 19 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வரிசை அமைச்சுக்கு மற்றும் ஏனைய 19 ஊழியர்கள் ஏனைய வெளி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் போது சம்பளமாக முறையே ரூபா 3,146,776 தொகை மற்றும் 1,351,400 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை போக்குவரத்து சபையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு, தனியார் போக்குவரத்து அமைச்சுக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு மற்றும் தேசிய போக்குவரத்து மருந்துவ நிறுவனத்திற்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் மீளளிப்பு செய்யும் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது சம்பளமாக ரூபா 40,401,906 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அத் தொகையில் ரூபா 24,438,400 தொகை மாத்திரம் மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 15,936,506 தொகை மேலும் மீளளிப்பு செய்யப்பட வேண்டிக் காணப்பட்டது.

(இ) சபையினால் மாதாந்தம் ரூபா 44,800 இற்கான வாடகை அடிப்படையில் பெற்றிருந்த 05 மோட்டார் வாகனங்களை போக்குவரத்து அமைச்சுக்கு மற்றும் போக்குவரத்து பிரதி அமைச்சர் அலுவலகத்திற்கும் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதற்கான எரிபொருள் கிரயம் மற்றும் வாகன வாடகையாக முறையே ரூபா 748,430 தொகை மற்றும் ரூபா 1,142,400 தொகைகள் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

### 4.9 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

ரூபா 97,462,160 கிரயத்தையுடைய 143 பஸ் வண்டிகள் 2002 ஆண்டின் போது தனியார் நிறுவனம் ஒன்றிற்கு மறுசீரமைப்பதற்காக அனுப்பப்பட்டிருந்தது. எனினும் அந்த நிறுவனம் தற்போது செயற்பாட்டு நிலையில் காணப்படாமையால் குறிப்பிட்ட பஸ் வண்டிகள் திருப்பி சபைக்குக் கிடைப்பது தொடர்பாக ஆபத்து ஒன்று காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டிற்கான கணக்குகளில் அவை தொடர்பாக போதியளவு வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.10 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9 ஆம் அத்தியாயத்திற்கு இணங்க இலங்கை போக்குவரத்துச் சபைக்கு அமைப்பு வரைமொன்று ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று, பதவியுயர்வு நடைமுறையொன்று என்பன தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் டிப்போக்களில் சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் பதவிகளின் தேவையினை மற்றும் தற்போது காணப்படும் உள்ளவாறான எண்ணிக்கைகளுக்கிடையே மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் மீது கவனம் செலுத்திய போது சாரதிய பதவிகளின் 28 சதவீதம் மிகை ஒன்றில் இருந்து 35 சதவீதத்திற்கான பற்றாக்குறை வரையான வீழ்ச்சியில் பரவியிருந்ததுடன் நடத்துனர் பதவிகளில் 51 சதவீதம் மிகையில் இருந்து 36 சதவீதத்திற்கான பற்றாக்குறை வரை பரவிக் காணப்பட்டது. எவ்வாறாயினும் நடத்துனர்கள் மற்றும் சாரதிகள் பதவிகளில் மிகையாக காணப்பட்ட 25 டிப்போக்கள் காணப்பட்டதுடன் அந்த மிகை பதவியணியினரை சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் பற்றாக்குறையாக காணப்படும் டிப்போக்களுக்கு இணைந்து சாரதிகள் மற்றும் நடத்துனர் பற்றாக்குறையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதேபோல் 2015 மே 01 திகதியில் உள்ளவாறு சபையில் பொருத்தமில்லாத வேலைகளில் கடமையாற்றிய பதவியணியினர் தொடர்பாக கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் 235 சாரதி ஊழியர்களும் 528 நடத்துனர் ஊழியர்களும் பொருத்தமற்ற வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(இ) உள்ளக கணக்கு பரிசோதகர்கள் என நியமனம் செய்வதற்காக சபையில் உள்ளவாறான பதவியணியின் I ஆம் தர உத்தியோகத்தர் ஒருவர் காணப்படாமையால் II ஆம் தர உத்தியோகத்தர் ஒருவர் பிரதான உள்ளக கணக்கு பரிசோதனைகள் என நியமனம் செய்யப்பட்டிருந்தார்.

(ஈ) பிராந்திய அலுவலகங்களில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் III A தர உத்தியோகத்தர் ஒருவர் இருக்க வேண்டுமெனினும் கம்பஹா, களுத்துறை, ரஜரட்டை, உருகுணை மற்றும் வடக்கு ஆகிய பிராந்திய அலுவலகங்களில் III A தர உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்பித்தல்

2003 ஜூன் 02 திகதிய பீஎப/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்காக சமர்பிக்கப்பட வேண்டுமெனினும் 2014 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 01 வருடம் 11 மாதங்கள் தாமதித்து 2017 ஜனவரி 31 திகதியே கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

2003 ஜூன் 02 திகதிய பீஎப/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 பந்தியின் பிரகாரம் திட்டமிடப்பட்ட காலப்பகுதியில் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை நெருங்கக் கூடிய விதமாக முகாமைத்துவத்தின் பொறுப்புக்களை தெளிவாக இனங்கண்டு செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனினும் சமர்பிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் சபையின் நிதி நிலைமையைக் கவணத்தில் எடுக்காமல் நெருங்க முடியாத குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள் உட்படுத்தி தயாரிக்கப்பட்டிருந்தது.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

2014 டிசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு உள்ளகக் கணக்காய்வு பிரிவில் ஒட்டுமொத்த பதவியணிகள் 183 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் நேரடியாக கணக்காய்வுடன் தொடர்புடைய பதவியணியினர் 154 தொகையும் ஏனைய பதவியணியினர் 27 உம் இருந்தது. பிரதான உள்ளக கணக்காய்வாளர் தவிர ஏனைய கணக்காய்வு பதவியணி 153 ஆகக் காணப்பட்டதுடன் அந்த உத்தியோகத்தர்களை பிராந்திய அலுவலகங்களுக்கு இணைக்கும் போது கணக்காய்வின் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் விதத்தில் பிராந்தியங்களுக்குரிய டிப்போக்களின் எண்ணிக்கையை கவனத்தில் எடுத்து உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 பெறுகைகள் திட்டம்

பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 4.2.1 பிரிவின் பிரகாரம் சபையினால் பிரதான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 4.2.1 (ஆ) இன் பிரகாரம் குறைந்தபட்சம் 03 வருட காலத்திற்காக எதிர்பார்க்கும் பெறுகைகள் விடயங்களை பிரதான பெறுகைகள் திட்டத்தில் அட்டவணைப்படுத்தப்பட்டிருக்க வேண்டுமெனினும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிரதான பெறுகைகள் திட்டம் அவ்வாறு தயாரித்திருக்கவில்லை.

## 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை போக்குவரத்து சபையினால் 2014 ஆண்டிற்காக தயாரித்திருந்த பாதீட்டில் காணப்பட்ட தகவல்கள் மற்றும் 2014 ஆண்டிற்கான நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள தகவல்களுடன் இணக்கஞ் செய்ய இயலாத விதமாக ஒன்றிற்கு ஒன்று வித்தியாசமான விதத்தில் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சபையினால் பாதீட்டு வருமானம் மற்றும் செலவினம் மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவினங்கள் இடையே முரணாக காணப்படுகின்றனவா என தேடிப் பார்த்தல் ஒன்று மேற்கொள்ளப்படாமல் உள்ளது எனவும் மற்றும் அவை நிறுவனத்தின் நிதி விடயங்களாக கட்டுப்படுத்துவதற்காக முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) கணக்காய்வின் போது இணக்கஞ் செய்யக் கூடிய சில வருமானம் மற்றும் செலவு விடயங்களை பரிசோதனை மேற்கொண்ட போது சபையின் 11 வருமான மற்றும் செலவு விடயங்கள் பாதீட்டுப் பெறுமதி மற்றும் உள்ளவாறான பெறுமதிகளிடையே 13 சதவீதம் முதல் 1621 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டன.

(இ) சபையின் பாதீட்டு மொத்த வருமானம் ரூபா 37,197,553,260 தொகையாக காணப்பட்டதுடன் உள்ளவாறான மொத்த வருமானம் ரூபா 32,780,242,592 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 4,417,310,668 எனப்படும் 11.87 சதவீதத்திற்கான பிரதிகூலமான முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ஈ) சபையின் மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மொத்த செலவுகள் ரூபா 33,980,440,679 தொகையாக காணப்பட்டதுடன் உள்ளவாறான மொத்த செலவுகள் ரூபா 34,042,371,040 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 61,930,361 இற்கான பிரதிகூலமான முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது.

## 5.6 சுற்றாடல் சார் மற்றும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

1553/17 ஆம் இலக்க 2008 ஜனவரி 25 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் மோட்டார் வாகனச் சட்டம் (அதிகாரம் 203) மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கட்டளை இலக்கம் 3 (இ) இன் கீழ் இலங்கையில் பயன்படுத்தப்படும் அனைத்து மோட்டார் வாகன புகை பரிசோதனைக்கு ஆளாக்கி இணக்கச் சான்றிதழ் ஒன்று பெற்றுக்கொள்ள வேண்டும். கண்டிப் பிராந்தியத்தின் மூலம் கணக்காய்விற்கு சமர்பித்திருந்த தகவல்களின் பிரகாரம் அப் பிராந்தியத்தை சேர்ந்த 07 டிப்போக்களில் மொத்த பஸ் வண்டிகளின் எண்ணிக்கை 595 இல் 135 பஸ் வண்டிகள் மாத்திரம் புகை சான்றிதழ் பெற்றிருந்ததுடன் 460 பஸ் வண்டிகள் புகை பரிசோதனை இன்றி நாளாந்த ஓட்டத்தில் ஈடுபட்டிருந்தது. இதன் காரணமாக சபையின் பஸ் வண்டிகளின் மூலம் கண்டி பிராந்தியத்தில் சுற்றாடல் மாசடைதலுக்கு தாக்கம் ஏற்பட்டிருக்கவில்லை என கணக்காய்வில் தவிர்க்க முடியாதுள்ளது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறைபாடுகள் அவ்வப்போது சபைத் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) சபையின் பஸ் வண்டிகளின் விபரங்கள் அடங்கிய பதிவேடு ஒன்று பேணப்படாமை. |
| | (ii) சொத்துக்களின் பாதுகாப்பு ஏற்படக்கூடிய விதத்தில் பொறுப்புக்கள் சாட்டப்பட்டிருக்காமை. |
| | (iii) சொத்துக்கள் கொள்வனவு செய்தல் மற்றும் கணக்கீடு செய்வதில் உள்ளகக் கட்டுப்பாடு பலவீனமடைதல் |
| | (iv) வருடாந்த சான்றுறுதி செய்யப்படாமை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | நிதிக் கட்டுப்பாடு | (i) பெறவேண்டிய பணத்தை விரைவாக சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் செலுத்த வேண்டிய பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| | | (ii) முற்பணங்கள் குறிப்பிட்ட கருமம் முடிந்தவுடனே தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர் ஒருவர் மேற்பார்வை செய்யாமை |
| | | (iii) முற்பணப் பதிவேடு பேணப்படாமை |
| | | (iv) ஊழியர் பிணை வைப்புக்களுக்காக பதிவேடு பேணப்படாமை மற்றும் ஊழியர் பிணை வைப்புக்களை சபையின் செலவுகளுக்காக பயன்படுத்தல். |
| | | (v) நிதிப் பிரிவினால் தேவையின்றி வங்கிக் கணக்குகள் பேணல், இணக்கங்கள் செய்யாமை மற்றும் சீராக்கல் செய்யாமை. |
| (இ) | வருமான நிருவாகம் | பிரயாண அனுமதிப்பத்திர வருமானம் சேகரிப்பதற்கு தொடர் இலக்கங்களுடனான அச்சிடப்பட்ட இன்வொயிஸ்களும் பயன்படுத்தாமை. |
| (ஈ) | களஞ்சியக் கட்டுப்பாடு | (i) களஞ்சியத்திற்கு கிடைக்கும் பண்டங்களை பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர் ஒருவரின மேற்பார்வைக்கு உள்ளாக்காமை. |
| | | (ii) நீண்ட காலமாக காணப்படும் பயன்படுத்த முடியாத பண்டங்களை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்காமை. |

(iii) தலைமை அலுவலகத்தினால் கட்டளை அனுப்பாட்டு டிப்போக்களுக்கு நேரடியாக வழங்கும் பண்டங்கள் தொடர்பாக தலைமை அலுவலகத்திற்கு உரிய முறையில் அறிவிக்காமை.

(iv) களஞ்சிய தரவுகள் மற்றும் டிப்போக்களின் தரவுகளுடன் இணங்கச் செய்யப்படாமை.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச். எம். காமினி விஜேசிங்ஹ

கணக்காய்வாளர் தலைமை அதிபதி